NAVAMANI DAILY
නවමණී දිනපතා
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்
QD / 154 / NEWS / 2017



07 » குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்ட விரும்புகிறதா முஸ்லிம் கூட்டமைப்பு?



04 » அரசியல் முன்மாதிரியை தேடும் மக்கள் வாக்கு



12 » பாக். அணியில் மீண்டும் சல்மான் பட்

# இலங்கை முஸ்லிம்களின் நிலை கண்டு அதிர்ச்சி

## தொடர்ந்தும் குரல் கொடுப்பேன்

## பரிந்துரைகளை அமுல் நடத்த அழுத்தம்

## யாழ். முஸ்லிம் தூதுக் குழுவிடம் ரீட்டா ஐசாக்





■ ஜெனீவாவிலிருந்து ஏ.ஏ.எம். அன்சிர்

இலங்கை முஸ்லிம்களின் நிலை கண்டு தாம் அதிர்ச்சியடைந்ததாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின், சிறுபான்மை விவகாரங்களுக்கான பிரதிநிதி ரீட்டா ஐசாக் யாழ் முஸ்லிம் குழுவிடம் தெரிவித்தார்.

ஜெனீவாவில் அமைந்துள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சர்வதேச யாழ்ப்பாண முஸ்லிம் அமைப்பின் கலந்துரையாடலின்

11 »»»»

## மனித உரிமைகள் அலுவலகம் தீர்மானமில்லை

பிரதி அமைச்சர் அஜித் பி பெரேரா



■ அ. அருண் பிரசாந்த்

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்தின் அலுவலகத்தை இலங்கைக்குள் அமைப்பது தொடர்பில் அரசு இன்னும் தீர்மானிக்கவே இல்லை என்று பிரதியமைச்சர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

மேலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும்

11 »»»»

## கடத்தப்பட்ட கப்பலை விடுவிக்க கப்பம் கோரும் கொள்ளையர்கள்

சோமாலியா கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ள கப்பலை விடுவிப்பதற்கு குறித்த கடற்கொள்ளையர்கள் கப்பம் கோருவதாக ஐரோப்பிய ஒன்றிய கடற்படை தெரிவித்தது.

எனினும், கப்பத் தொகை இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை ஐரோப்பிய

11 »»»»



முஸ்லிம் தனியார் சட்டத்தில்

## விட்டுக்கொடுப்புகளை செய்தால் பிரச்சினைகள் தோன்றலாம்

உலமா சபை பிரதிநிதிகளிடம் ரவூப் ஹக்கீம்



■ பிறவ்ஸ்

முஸ்லிம் தனியார் சட்டத்தில் விட்டுக்கொடுப்புகளை செய்யும்போது பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியேற்படும். திருமணம் முடித்தவர்களுக்கு சரியானதொரு ஒழுக்கக்கோவையை அமைத்துக்கொடுக்க வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம்

11 »»»»

## நுகர்வோர் உரிமைகளை சட்டத்தால் மாத்திரம் பாதுகாக்க முடியாது

உலக நுகர்வோர் தினத்தில் ஜனாதிபதி




■ நுஸ்கி முக்தர்

சட்டத்தால் மாத்திரம் நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாக்க முடியாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

2017 ஆம் ஆண்டு டிஜிட்டல் யுகத்தில் நுகர்வோர் உரிமை என்ற கருப்பொருளில் உலக

11 »»»»

## கிண்ணியாவில் டெங்கு ஒழிப்பு தீவிரம்; முப்படையினர், மக்கள் களத்தில்

ஆஸ்பத்திரி முன் வாய்க்காலில் நுளம்புக் குதம்

கிண்ணியாவில் நேற்று முப்படையினர் மற்றும் வெளிப் பிரதேசங்களிலிருந்து வந்த பொதுச் சுகாதார அதிகாரிகள் மற்றும் தொண்டர்கள் பிரதேசத்தை சுத்திகரிப்பிலீடுபட்ட போது கிண்ணியா வைத்தியசாலைக்கு முன்னாலுள்ள வாய்க்காலில் டெங்கு குதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

11 »»»»

## கலப்பு நீதிமன்றம்; சர்வதேச நீதிபதிகளுக்கு ஒருபோதும் அனுமதி வழங்கோம்

அரசாங்கம் திட்டவட்டம்

■ அ. அருண் பிரசாந்த்

சர்வதேசமும் பிரிவினைவாதிகளும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவது தொடர்பில் எவ்வாறான அழுத்தங்களை விடுத்தாலும் கலப்பு நீதிமன்றுக்கோ சர்வதேச நீதிபதிகளுக்கோ இலங்கைக்குள்

11 »»»»

## டெங்கு நோயை கண்டுபிடிக்க கிண்ணியாவுக்கு விஷேட மருந்து




■ கிண்ணியா சஹ்ரீன் எம் இஸ்மத்)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் ஏற்பட்டுள்ள டெங்கு காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களை 24 மணிநேரத்திற்குள் டெங்கு நோய் பிடிக்கப்பட்டுள்ளதா என்பதை கண்டுபிடிப்பதற்கு விஷேட மருந்து சுகாதார அமைச்சினால் கிண்ணியா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு காய்ச்சலினால்

11 »»»»

## காத்தான்குடியில் முக்கிய தீர்மானங்கள்

■ காத்தான்குடி நிருபர்

அமைதிக்கும் சமாதானத்திற்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் காத்தான்குடி பிரதேசத்தில் பொது இடங்களில் மற்றும் வீதியோரங்களில் மார்க்கப்பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கு தடை விதிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடியில் கடந்த (10) வெள்ளிக்

11 »»»»

சுற்றுச் சூழலை தூய்மையாக வைத்து டெங்கு நுளம்புகளை ஒழிப்போம்! உயிர்ப்பலிகளை தவிர்ப்போம்!
ஸ்ரீ லங்கா தவ்ஹீத் ஜமாஅத்தின்
டெங்கு விழிப்புணர்வு வாரம்
இன்ஷா அல்லாஹ் மார்ச் 16 முதல் ஏப்ரல் 04
SLTJ
நாடும் நாமும் நலமுடன் வாழ அனைவரும் ஒன்றாய் உழைத்திடுவோம்!

# வெளிப் பிரதேச குப்பைகளை கொலன்னாவையில் கொட்ட வேண்டாம் !

## அமைச்சர் பைஸர் முஸ்தபா ஆணையாளருக்கு உத்தரவு

( மினுவாங்கொடை நிருபர் )

வெளிப் பிரதேசங்களில் சேரும் குப்பைகளைக் கொண்டுவந்து கொலன்னாவையில் கொட்ட இடமளிக்க வேண்டாம். இந் நடவடிக்கையை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இன்றிலிருந்து செயற்படுத்த வேண்டும். அத்துடன், அவ்வாறு கொட்டுவோர்களுக்கு எதிராக வழக்குத் தொடருமாறும் இது தொடர்பில் தனக்கு விரிவான அறிக்கையொன்றை கூடிய விரைவில் சமர்ப்பிக்குமாறும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைஸர் முஸ்தபா கொலன்னாவை நகர சபை ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்தார்.



அமைச்சின் கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை மாலை விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது. இக் கலந்துரையாடலில் கொழும்பு மா நகர சபை, தெஹிவளை - கல்கிசை மா நகர சபை, கொலன்னாவை நகர சபை ஆகியவற்றின் ஆணையாளர்கள், அதிகாரிகள் உள்ளிட்ட நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுகாதாரப் பணிமனை அதிகாரிகள் ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர். திண்மக் கழிவுகள் தொடர்பிலான பல்வேறு ஆலோசனைகளையும் இவர்கள் அமைச்சரிடம் முன்வைத்தனர்.

இங்கு இடம்பெற்ற விசேட கலந்துரையாடல் அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கும்போது குறிப்பிட்டதாவது ;

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில். வெளியிடங்களிலுள்ள குப்பை கூளங்கள் இன்று முதல் கொலன்னாவையில் கொட்டப்படுவது நிறுத்தப்படல் வேண்டும். இது தொடர்பில் அவதானம் எடுத்துச் செயற்படுமாறு. கொலன்னாவை நகர சபை ஆணையாளருக்கு உத்தரவு பிறப்பிக்கின்றேன். இது தவிர. இன்று சிலர் வாய்க்கால்களுக்கு மேலால் கொங்கிறீட் தட்டுக்களை இட்டுக் கொண்டு. அதற்கு மேலால் சட்ட விரோதக் கட்டிடங்களைக் கட்டியுள்ளனர். வீடுகள், கடைகள் என்பவற்றை அமைத்துள்ளதால் இவ்விவகாரமும் இன்று பாரிய பிரச்சினையாகத் தோன்றியுள்ளது. இது தொடர்பில் கவனம் எடுத்துச் செயற்படுமாறும் கொழும்பு, தெஹிவளை, கொலன்னாவை நகரங்களை நிர்வகிக்கும் ஆணையாளர்களைக் கண்டிப்பாகக் கேட்டுக் கொள்கின்றேன். இது குறித்த நடவடிக்கைகளை இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ள வேண்டும். இவர்கள் சம்பந்தமாகவும் விழிப்புடன் இருந்து செயற்படவேண்டும். இரு வாரங்களுக்குள் இவர்களிடமிருந்து சரியான பதில் கிடைக்காவிட்டால், இவர்கள் தொடர்பில் வழக்குத் தொடருமாறும் சகல ஆணையாளர்களையும் திடமாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் இவைகள் சம்பந்தமாக எனக்கு பூரண அதிகாரங்களை வழங்கியுள்ளனர். இது குறித்த அறிக்கைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்குமாறும் என்னைப் பணித்துள்ளனர். எனவேதான், இந்த விவகாரங்கள் தொடர்பில் அதிகாரிகள் எவரும் அசிரத்தையாக இருந்துவிடக்கூடாது. அவசியம் எனக்கருதி, அவசரமாக செயலில் இறங்கவேண்டும். குப்பை கூளங்கள் கொட்டப்படும் இடங்களில் பொது மக்களை விழிப்பூட்டும் அறிவித்தல்களையும் விளம்பரப்படுத்த வேண்டும். குறிப்பாக, 'குப்பை கொட்டினால் வழக்குத் தொடரப்படும் குப்பை கொட்டினால் தண்டனை போன்ற வாசகங்கள் ஊடாக பொது மக்களை விழிப்படையச் செய்யவேண்டும்.

இதற்கும் மேலதிகமாக துண்டுப் பிரசுரங்களையும் தெளிவாக அச்சிட்டு மக்கள் மத்தியில் விநியோகிப்பதற்கான ஏற்பாடுகளையும் விரிவான முறையில் செய்யமுடியும். இதன்காரணமாக, கொழும்புப் பிரதேசத்தை டெங்கு தொற்றுத் தாக்கத்திலிருந்து இதன் பிறகிலிருந்தாவது காப்பாற்றிக் கொள்ள முடியும். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த விவகாரம் தொடர்பில் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் என்ற வகையில், பொது மக்களைப் பாதுகாப்பதே தனது கடமையாக இருப்பதுடன், பிரதான நோக்கமும் இதுவாகும் என்றும் அமைச்சர் இக் கலந்துரையாடலின்போது அதிகாரிகள் மத்தியில் தெளிவுபடுத்தினர்.

## கிண்ணியாவில் சூழல் அசுத்தம்; 30 பேருக்கு 3000 வீதம் அபராதம்

(அப்துல்சலாம் யாசீம்)

கிண்ணியாவில் டெங்கு பரவும் விதத்தில் சுற்றுப்புறச்சூழலை அசுத்தமாக வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட 30 பேருக்கும் 3000 மூவாயிரம் ரூபாய் வீதம் தண்டம் செலுத்துமாறு திருகோணமலை நீதிமன்ற நீதவான் எம்.எச்.எம்.ஹம்ஸா நேற்று உத்தரவிட்டுள்ளார்.

கிண்ணியா பொது சுகாதார பரிசோதகர்களினால் திருகோணமலை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட நிலையில் அவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, சுற்றுப்புறச்சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இனிவரும் காலங்களில் இவ்வாறான முறைப்பாடுகள் வரக்கூடாது என எச்சரிக்கை விடுத்ததுடன் தண்டமாக மூவாயிரம் ரூபாய் செலுத்துமாறும் நீதவான் ஹம்ஸா உத்தரவிட்டார். கிண்ணியாவில் டெங்கு பரவி வருவதினால் சுற்றுப்புறச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு அறிவுறுத்தியும் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்காதவர்களுக்கும் எச்சரிக்கை கடிதம் வழங்கியும் அதனையும் பின்பற்றாதவர்களுக்குமே வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை கிண்ணியா மற்றும் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப்பிரிவில் தொடர்ந்தும் தீவிர சோதனைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொது சுகாதார பரிசோதகர்கள் குறிப்பிட்டனர்.

# இரத்தினபுரி கல்வி வலய ஆசிரியர்களுக்கு செயலமர்வு

(எம்.எல்.எஸ்.முஹம்மத், இரத்தினபுரி நிருபர்)

இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையுடன் இணைந்து கல்வி அமைச்சு மேற்கொண்டு வரும் பாடசாலை மாணவர்கள் தொடர்பான பாதுகாப்பு வேலைத் திட்டத்தின் கீழ் இரத்தினபுரி கல்வி வலய ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வுகளை மிக விரைவில் வார இறுதி நாட்களில் நடத்துவதற்கு சப்ரகமுவ மாகாண கல்விப் பணிமனை தீர்மானித்துள்ளதாக இரத்தினபுரி வலய கல்விப் பணிப்பாளர் நேற்று இடம்பெற்ற இரத்தினபுரி வலய அதிபர்களுக்கான கூட்டத்தின் போது குறிப்பிட்டார்.

அண்மைக் காலமாக இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள ஒருசில பாடசாலையின் மாணவர்களின் ஒழுக்க நடத்தைகள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் தனக்கு தொடர்ச்சியாக கிடைக்கப் பெற்றுவருவதாகவும் அதிபர்களிடம் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார். பெற்றோர்களிடம் காணப்படும் தவறான பழக்க வழக்கங்களினாலும் பாடசாலை மாணவர்கள் மத்தியில் அதிகரித்து வரும் நவீன தொடர்பு சாதனங்களின் கட்டுப்பாடற்ற பாவனையினாலும் பாடசாலை மாணவர்களின் ஒழுக்கம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் பாரிய அச்சுறுத்தல்கள் காணப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். சமூகத் தொடர்பாடல்கள் மற்றும் விழிப்புணர்வுகள் குறைவான பின்தங்கிய பிரதேசங்களை சேர்ந்த சிறுவர்கள் மாத்திரமின்றி நகர்ப்புறங்களில் வசிக்கும் கௌரவமான குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளும் சிறுவர் துஷ்பிரயோகம் போதைப் பொருள் பாவனை மற்றும் நடத்தை முரண்பாடு தொடர்பான பிரச்சினைளுடன் தொடர்புள்ளவர்களாக மாறி வருகின்றனர். இது தொடர்பாக பெற்றோர்களையும் பாடசாலை ஆசிரியர்களையும் தெளிவுபடுத்த வேண்டிய தேவையும் அவசியமும் அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

வகுப்பு ரீதியாக இடம்பெறவுள்ள மேற்படி ஆசிரியர் வழிகாட்டல் செயலமர்வுக்கு இரத்தினபுரி வலயத்தில் உள்ள அனைத்துப் பாடசாலைகளின் ஆசிரியர்களையும் பங்குபெறச் செய்வது தொடர்பில் அனைத்து அதிபர்களும் கூடிய கவனம் செலுத்த வேண்டும் எனவும் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டார்.



அம்பாறை மாவட்ட சமூகசேவை அமைப்பான அட்சோ (ADSSO) நிறுவனம் ஏற்பாடு செய்த இலவச ஊடகச் செயலமர்வு அண்மையில் கல்முனை ஆஸாத் பிளாஸா மண்டபத்தில் நடைபெற்றது. இச்செயலமர்வில் ஊடகத்துறையில் ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகள், பல்கலைக்கழக மாணவர்கள்,கல்வியல் கல்லூரி பயிலுநர்கள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். சிரேஷ்ட அறிவிப்பாளர் ஏ.ஆர்.எம். ஜிப்ரி, ஊடகவியலாளர்களான ஜெஸ்மி எம்.மூஸா, எஸ். ஜனூஸ் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

(படம் - எம்.எஸ்.எம். சாகிர்)


# டெங்கு அனர்த்தம் தொடர்பில் பிரதமருடன் இம்ரான் எம்.பி.சந்திப்பு

## 50 இலட்சம் ரூபா ஒதுக்கீடு!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிண்ணியாப் பிரதேசத்தில் டெங்கு கட்டுப்பாடு மற்றும் நோயாளர்களின் பராமரிப்பு பணிகளுக்காக தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார அமைச்சு மூலம் 50 இலட்சம் ரூபா நிதியினை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒதுக்கீடு செய்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,



கிண்ணியாவில் டெங்கு காய்ச்சலின் தாக்கம் கடுமையாக அதிகரித்துள்ள நிலையில், நேற்றுமுன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை, தான் அவசரமாக சந்தித்து கலந்துரையாடியதாகவும் அதன்போது கிண்ணியாப் பிரதேச மக்கள் டெங்கு காய்ச்சலினால் கடும் அவஸ்தைப்படுவதாகவும் அவர்களின் இயல்புநிலை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமரிடம் சுட்டிக்காட்டியதுடன் டெங்கு கட்டுப்பாடு நடவடிக்கைகளை இன்னும் விரிவுபடுத்துவதற்கும் நோயாளர்களின் பராமரிப்பு பணிகளுக்காக போதிய நிதி தேவைப்படுவதாக பிரதமரிடம் வலியுறுத்தினேன்.

இதனை ஏற்றுக்கொண்ட பிரதமர், முதற்கட்டமாக உடனடியாக 50 இலட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்வதாக தெரிவித்து, தனது பொறுப்பிலுள்ள தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார அமைச்சுக்கான இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேராவுக்கு இதற்கான பணிப்புரையை விடுத்தார். அத்துடன் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்ட பிரதமர், டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை துரிதமாக முன்னெடுக்குமாறும் இதற்காக சகல தரப்பினரதும் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும், இவ்விடயம் குறித்து விசேட அவதானம் செலுத்தி, கள நிலவரங்களை தனக்கு அவ்வப்போது தெரியப்படுத்துமாறு இச்சந்திப்பில் பங்கேற்றிருந்த தேசிய கொள்கைகள், பொருளாதார விவகார அமைச்சுக்கான இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேராவை பிரதமர் பணித்தார்.

# தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்களுக்கு பதிலாக மறைக்கப்படாத உண்மைகள் நூல் வெளியீடு



(எம்.வை.அமீர்)

அண்மையில் 'தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்கள்' எனும் தலைப்பில் தாருஸ்ஸலாம் மீட்பு முன்னணி என்று உரிமைகோரிய அமைப்பின் பெயரில் புத்தகம் வெளியிடப்பட்டது.

இப்புத்தகம் பல்வேறு வாதப்பிரதிவாதங்களை ஏற்படுத்தியிருந்தது. இவ்வாறான சூழலில் குறித்த புத்தகத்துக்கு பதிலாக 'தாருஸ்ஸலாம் மறைக்கப்படாத உண்மைகள்' எனும் தலைப்பில் 'தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்கள்' என்ற புத்தகத்துக்கு பதிலளிக்கும் விதத்தில், புத்தகம் ஒன்று வெளியிடப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவரும் முன்னாள் கல்முனை மாநகரசபையின் பிரதி முதல்வருமான ஏ.எல்.அப்துல் மஜீத்தின் முன்னிலையில், கிழக்குமாகாணசபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொருளாளருமான கே.எம்.அப்துல் றஸாக்கின் (ஜவாத்) தலைமையில், கிழக்குமாகாணசபை உறுப்பினர் கே.எம்.அப்துல் றஸாக்கின் கருத்திலும், எழுத்தாளர் நவாஸ் சௌபியின் எழுத்தாக்கத்திலும் அண்மையில் சாய்ந்தமருது லீமெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் வைத்து தாருஸ்ஸலாம் மறைக்கப்படாத உண்மைகள்' என்ற புத்தகம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக விளையாட்டுத்துறை பிரதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான எச்.எம்.எம்.ஹரீஸ் மற்றும் சுகாதார பிரதி அமைச்சர் பைசால் காஸிம் ஆகியோர் கலந்துகொண்டதுடன் கிழக்குமாகாண சுகாதார அமைச்சர் ஏ.எல்.எம்.நஸீர் கௌரவ அதிதியாகவும் கிழக்குமாகாணசபையின் உறுப்பினர்களான ஆர்.எம்.அன்வர், ஏ.எல்.தவம் மற்றும் ஐ.எல்.எம்.மாஹிர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் மன்சூர் ஏ. காதர் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்துகொண்டனர்.

தாருஸ்ஸலாம் மறைக்கப்பட்ட மர்மங்கள் ஆழம் அறியாமலும் நீந்தத்தெரியாமலும், கூச்சலிட்டு நீச்சலில் வெல்ல நினைத்த மன்சூர், தவம், பழில், லாஹிர் ஆகிய நால்வருக்கும் இவர்களை வழி நடத்தித்துணை நிற்போருக்கும் சமர்ப்பணம் செய்யப்பட்டிருந்தது.



வத்தளை, என்டேரமுல்லை றோஸ்விலா கார்டன் அஹமதியதுல் பிர்தௌசியா பாடசாலையின் இஸ்லாமிய தின நிகழ்வும் பரிசளிப்பும் வத்தளை சாந்தி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றபோது சுயாதீன தொலைக்காட்சி சேவையின் முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிக்கு விருதும் சான்றிதழும் வழங்குவதையும் சட்டத்தரணி அஸ்ரப் ரூமி, அஹதியாத் தலைவர் எம்.ஏ.சி. கமால்டீன் ஆகியோரையும் காணலாம்.




இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள தென் கொரியாவின் வெளிவிவகார அமைச்சர் யுன் பியுன் சே நேற்று முன்தினம் இரவு 11.55 மணியளவில் இலங்கையை வந்தடைந்தார். மேலும், நேற்றையதினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அலரி மாளிகையில் வந்து சந்தித்து கலந்துரையாடினார். 31 ஆண்டுகளுக்குப் பின்னர் தென்கொரிய அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாளை முதல் மழை வீழ்ச்சி குறைவடையும்

நாட்டின் கடந்த சில நாட்களாக பல பிரதேசங்களில் பெய்து வரும் மழை வீழ்ச்சியானது நாளை வெள்ளிக்கிழமை வரையில் குறைவதற்கான வாய்ப்புக்கள் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்தது.

இன்றையதினம் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பிற்பகல் 2 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யவுள்ளதோடு, மேற்கு, சப்ரகமுவ மற்றும் வட மேற்கு மாகாணங்களின் பல பிரதேசங்களில் மணிக்கு சுமார் 75 மில்லிமீற்றருக்கு அதிகளவான மழைவீழ்ச்சி பொழியும் என்று திணைக்களம் குறிப்பிட்டது.

கிழக்கு மற்றும் தெற்கு கரையோரங்களில் காலைவேளையில் சிறிதளவு மழை பெய்யும். பலத்த காற்றுடன் மழை மற்றும் இடியுடன் கூடிய மழை எதிர்பார்க்கப்படுவதனால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியது.

# பஷிலுக்கு பிணை

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்திற்குச் சொந்தமான 2 கோடியே 90 இலட்சம் ரூபா நிதியை பயன்படுத்தி, மஹிந்த ராஜபக்ஷவின் உருவம் பொறிக்கப்பட்ட ஒரு இலட்சம் பஞ்சாங்க கலண்டர்களை அச்சிட்டமை உள்ளிட்ட ஐந்து குற்றச்சாட்டுக்களின் கீழ் சட்டமா அதிபரால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதில் முதலாவது குற்றவாளியாக பஷில் ராஜபக்ஷவின் பெயர் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த வழக்கு நேற்றையதினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, ஒரு இலட்சம் ரூபா ரொக்கப் பிணை மற்றும் 5 இலட்சம் ரூபா சரீரப் பிணைகள் இரண்டில், பஷில் ராஜபக்ஷவை விடுவித்து, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க உத்தரவிட்டார்.

# சீரான திட்டங்கள் மூலம் திறைசேரிக்கு 2 1/2 கோடி கொடுத்தோம்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம்



**(பிறவ்ஸ் முஹம்மத்)**

மிகச் சிறந்த நீர் வழங்கல் திட்டங்களை முன்னெடுத்ததன் மூலம் இரண்டரை பில்லியன் பணத்தை திறைசேரிக்கு வழங்கியுள்ளதாகவும், நவீனமயமான வர்த்தக யுத்திகளை கையாண்டு தனியார் துறையின் பங்களிப்போடும், தொழிற்சங்கங்களின் ஒத்துழைப்போடும் பொது மக்களுக்கு கூடுதலான சேவையாற்ற உறுதிபூண்டுள்ளதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தெரிவு செய்யப்பட்ட அரச திணைக்களங்களுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளும் முதற்கட்ட நிகழ்வுகள் நேற்ற (15) முற்பகல் நிதியமைச்சின் பொதுதிறைசேரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் ஹக்கீம் இதனைக் கூறினார்.

அமைசச்சர் ஹக்கீம் அங்கு உரையாற்றுமபோது கூறியதாவது,

நீரை விரயமாகாமல் சேகரித்து எங்களது தனித்துவமான சிரமைப்பைக் கையாண்டு, பாவனையாளர்களுக்கு போதிய நீரை விநியோகிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருப்பதாவும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவும் அங்கு உரையாற்றினார். அமைச்சர்களான நிமல் சிறிபால டீ சில்வா, லக்ஷ்மன் யாப்பா அபேவர்தண ஆகியோரும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்களும் இதில் பங்குபற்றினர்.

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, துறைமுக அதிகார சபை, விமான சேவைகள் நிறுவனம் என்பன இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு உள்வாங்கப்பட்டிருந்தன.

# கடல்வழிப் பயங்கரவாதத்தால் பாரிய சவாலுக்கு முகம் கொடுத்துள்ளோம்

## பிரதமர் ரணில்

இந்திய கடல் பிராந்தியத்தில் தொடரும் கடல்வழிப் பயங்கரவாதத்தால் அதனை அண்டிய நாடுகள் பொருளாதார ரீதியாக பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'உலக பொருளாதாரத்துக்கு பாரிய அச்சுறுத்தலாக மாறக் கூடிய சமூத்திரப் பயங்கரவாதம்' எனும் தொனியின் கீழ் இந்தியாவில் இடம்பெற்ற மாநாட்டில், ஸ்கைப் ஊடாக உரையாற்றும்போது அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அதாவது, கடந்த 15 வருட காலமாக தரைவழிப்பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டாலும் கடல் வழியிலான பயங்கரவாதம் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இந்து சமூத்திரத்தில் காணப்படும் இந்நிலைமை காரணமாக அதனை அண்டியுள்ள பல நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்து சமூத்திர வலயத்தில் 3 பில்லியன் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அத்தோடு, இவ்வலயத்தின் அரைவாசிக்கும் அதிகமான கன்டயினர்கள் இந்த இந்து சமூத்திரத்தின் ஊடாகவே பயணிக்கின்றன. இது ஆசிய மற்றும் மத்திய கிழக்கு நாடுகளின் பொருளாதாரத்தில் பாரிய சக்தியாக காணப்படுகின்றது.

இந்நிலையில், இந்த பயங்கரவாதமானது பாரிய அச்சுறுத்தலாகவும் பாரிய பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது என்றும் தெரிவித்தார்.




## கிண்ணியாவில் டெங்கு பரவல்

# சுகாதார அமைச்சருக்கு முஸ்லிம் கவுன்ஸில் கடிதம்

திருகோணமலை மாவட்ட கிண்ணியாப் பகுதியில் வேகமாக பரவிவரும் டெங்கு நோய் தொடர்பில் அவசரமாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு ஸ்ரீ லங்கா முஸ்லிம் கவுன்ஸில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவிடம் செவ்வாயன்று வேண்டுகோள் விடுத்தது.

விசேட கடிதமொன்றின் மூலம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம். அமீன் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

கடந்த சில நாட்களுக்குள் 13 பேர் இந்த பரவிவரும் காய்ச்சல் நோயினால் உயிரிழந்துள்ளனர். இன்று இரண்டு பேர் உயிரிழந்துள்ளனர். இதனால், அப்பிரதேசத்தை அனர்த்தப் பிரதேசமாக பிரகடனப்படுத்துமாறு தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம் எனவும் அவர் அக்கடிதத்தில் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இப்பிரதேசத்தில் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தைத் தணிப்பதற்கு தேவையான உடனடி வைத்திய ஆளணியினரையும், மருந்து வசதிகளையும் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்க ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

நீங்கள் முன்னெடுக்கும் அவசர நடவடிக்கைகளுக்கு தங்களது மேலான நன்றிகளையும் உங்களுக்கு எமது அமைப்பு சார்பாக தெரிவித்துக் கொள்கின்றோம் எனவும் அவர் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் கூறியுள்ளார்.

# சட்டவிரோதமாக ஆஸி.சென்ற இலங்கையர்கள் நாடு திரும்பல்


சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு சென்ற 25 இலங்கையர்கள் அவுஸ்திரேலிய அரசினால் நேற்றைய தினம் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையம் தெரிவித்தது.

அந்தவகையில், நேற்று காலை 6.30 மணியளவில் அவுஸ்திரேலியாவிலிருந்து விசேட விமானத்தில் குறித்த இலங்கையர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். குறித்த 25 பேரில் மூன்று பெண்களும், 22 ஆண்களும் அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றத்தடுப்பு பிரிவினரால் முன்னெடுக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி மற்றும் வவுனியா பிரதேசங்களை சேர்ந்த பெண்கள் உள்ளிட்ட 25 பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 2016-10-31 அன்று விமானம் மூலம் மலேசியாவிற்கு சென்ற இவர்கள், அங்கிருந்து கடந்த ஜனவரி மாதம் படகு மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு சென்றிருப்பதாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.



எதியோப்பியாவிற்கான இலங்கையின் முதலாவது வதிவிடத்தூதுவராக சுமித் தசநாயக்க பதவியேற்றுள்ளார்.

இவர் ஆபிரிக்க யூனியனுக்கான இலங்கைப்பிரதிநிதியாகவும் செயல்படுகின்றார்.

எதியோப்பிய தலைநகர் அடிஸ் அபாபவில் அந்நாட்டு ஜனாதிபதியை சந்தித்து தனது நியமனம் தொடர்பான ஆவணத்தை கையளித்தார்.

NAVAMANI DAILY
நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
16TH MARCH 2017 - THURSDAY

# தலைநகரின் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்கு...

தலைநகரில் போக்குவரத்து நெரிசல் இன்று பாரிய ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அல்லது இதனால் ஏற்படும் பாதிப்பினைக் குறைப்பதற்கு பல்வேறு விதமான முயற்சிகள் காலத்திற்குக்காலம் எடுக்கப்பட்ட போதும் போக்குவரத்து நெரிசல் குறைந்ததாக இல்லை.

கடந்த திங்கள் முதல் மேல் மாகாண மாநகர அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் புதிய வேலைத் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ராஜகிரியவிலிருந்து ஆயுர்வேதச் சந்தி வரை பிரயாணிகள் போக்குவரத்து பஸ்களுக்கு நடு ஒழுங்கை மாதிரித்திட்டம் பரீட்சாத்தமாக அமுல்படுத்தப்பட்டது.

இந்தப் புதிய மாதிரித் திட்டம் பற்றி போக்குவரத்துப் பொலிஸார் பல நாட்களாகச் சாரதிகளைஅறிவூட்டியிருந்த போதும் கடந்த திங்களன்று பெரு நெரிசல் ஏற்பட்டு ஊழியர்களுக்கு அலுவலகங்களுக்குச் செல்வதில் தாமதம் ஏற்பட்டது. மக்கள் பல அசௌகரியங்களையும் எதிர்நோக்கினர்.

நேற்று முன்தினம் இந்த பரீட்சாத்த முறை அமுல்படுத்தப்பட்டது. முதல் நாள் இருந்ததனைவிட நெரிசல் குறைந்துள்ளது.

முதல் நாள் இந்த மாதிரித்திட்டம் பற்றி முச்சக்கர வண்டிகள் முற்றும் துவிச்சக்கரவண்டிகள் சரியாக அறிவூட்டப்படாமையால் நெரிசல் நிலை ஒன்று ஏற்பட்டதாக அநேக சாரதிகள் குற்றஞ்சாட்டினர்.

ஒரு திட்டம் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படும் போது பலவீனங்கள் ஏற்படுவது தவிர்க்க முடியாததே. அதற்காகவே திட்டங்கள் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்படுகின்றன.

மேல் மாகாண மாநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக ரணவக கொழும்பு உட்பட புற நகர்களின் போக்குவரத்து நெரிசல்களை குறைப்பதற்கு முன்னெடுத்து வரும் பல்வேறு செயற்பாடுகள் பாராட்டுக்குரியன.

போக்குவரத்து நெரிசல் என்பது மக்களுடைய அன்றாட போக்குவரத்துக்கு மட்டும் பாதிப்பை ஏற்படுத்துவதல்ல. நாட்டின் பொருளாதாரத்துடன் பின்னிப்பிணைந்தது. நாட்டில் பிரதான வணிக நகரில் சீரற்ற போக்குவரத்து முறை நீடிக்குமாயின் இதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்பினைக் கணக்கிலிட முடியாது.

மனித உழைப்பு வீண் விரயமாகுதல், எரிபொருளுக்கு பெருமளவு செலவாகுதல், தவிர சுற்றாடலைப் பாதிக்கும் வாயு கசிதல் போன்றவற்றைத் தவிர்க்கும் போக்குவரத்து முறைகள் தொடர்பாக நமது நாட்டின் கவனம் இன்றும் சரியாக செலுத்தப்படாதுள்ளது.

நீர்வழிப் போக்குவரத்து மற்றும் புகையிரதப் போக்குவரத்து குறித்து மேலும் கூடுதலான கவனஞ் செலுத்தப்பட வேண்டும்.

கடல் வழியாக வள்ளச் சேவைகளை ஈடுபடுத்துவதன் மூலமும் பாதைகளில் நிலவும் நெரிசலைக் குறைக்கலாம்.

புதிய மார்க்கங்களில் புகையிரதப் பாதைகளை நிர்மாணிப்பதன் மூலம் வீதிப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கலாம்.

இவ்வாறான சேவைகளைப் பலப்படுத்துவதன் மூலம் தலைநகருக்கு தனிப்பட்ட வாகனங்களில் வருவதனைக் குறைக்கலாம்.

மாற்று வழிகளை அறிமுகப்படுத்துவதன் மூலமே வீதிப் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியும்.

# அரசியல் முன்மாதிரியைத் தேடும் மக்கள் வாக்கு!

கஹட்டோவிட்ட முஹிடீன்

இந்த நாட்டுக்கு முன்மாதிரி மிக்க அரசியலையும், விழுமிய அரசியலையும் கொடுப்பவர்கள் மக்களின் செல்வாக்குக்கு உட்படுவார்கள் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக மாறி வருகின்றது. சாக்கடை அரசியலிலிருந்து மாற்றங்காண வேண்டும் என்ற உணர்வு இன்று சாதாரண மக்கள் முதல் படித்தவர்கள் வரை உருவாகியுள்ளது.

**களவு, மோசடிகளில் ஈடுபடுவதும், மக்களிடம் பொய்யான வாக்குறுதிகளை கூறி தப்பித்துக் கொள்வதும், அரசியல்வாதிகளுக்கு இன்று முடியாத ஒன்றாக மாறியுள்ளது. நேர்மையற்ற அரசியல்வாதிகளை மக்கள் வெறுக்கும் நிலைக்கு தள்ளப் பட்டுள்ளனர். மக்களை ஏமாற்றியதை இன்று மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர்.**

வெட்டினாலும், சிவப்பு, பச்சை, நீலம் எனும் இரத்த நிறங்களை கூறிய காலம் மலையேறி விட்டது. கடந்த 2015 ஆம் ஆண்டு அரசியல் மாற்றம் நல்லாட்சி எனும் பெயர் தாங்கி வந்த போது மக்கள் தங்களது வரட்டு கட்சி வாதங்களை விட்டும் விலகி நின்றமை இதற்கு சிறந்த ஆதாரமாகும்.

அரசியலில் மக்களின் நேரடி பங்குபற்றலும், நடைமுறையிலுள்ள ஊடக சுதந்திரமும், நாட்டின் அரசியல் போக்கில் புதிய மாற்றத்தைப் பற்றி சிந்திக்க தூண்டுதல்களை அளித்துள்ளன. தற்பொழுது முன்னைய காலத்தைப் போன்று மக்கள் பிரதிநிதிகள் தங்களுக்கு வாக்களித்த மக்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. வாக்குகளைப் பெற்றுக் கொண்டு தலைமறைவாகவும் முடியாது.


களவு, மோசடிகளில் ஈடுபடுவதும், மக்களிடம் பொய்யான வாக்குறுதிகளை கூறி தப்பித்துக் கொள்வதும், அரசியல்வாதிகளுக்கு இன்று முடியாத ஒன்றாக மாறியுள்ளது. நேர்மையற்ற அரசியல் வாதிகளை மக்கள் வெறுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மக்களை ஏமாற்றியதை இன்று மக்கள் உணர ஆரம்பித்துள்ளனர். அரசியல் ஜில்மார்ட்களை அடையாளம் காணும் அளவுக்கு மக்கள் அனுபவ அறிவைப் பெற்றுள்ளனர்.

மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் கருத்துக்கள் ஏட்டுச் சுரைக்காய் என்பது அவ்வமைப்புக்கு எதிரானவர்கள் முன்வைக்கும் ஒரு குற்றச்சாட்டு. இதனை பொது மக்களும் நன்கு விளங்கியுள்ளனர். இருப்பினும், நாட்டின் சமகால அரசியல் நிலைவரத்தை நோக்கும் ஒரு பொதுமகன், அவன் எந்த சமூகத்தை சார்ந்தவனாயினும் ஜே.வி.பி.யை ஒரு புதிய மாற்று சக்தியாக கனவுகாணும் நிலைக்கு மாறியுள்ளான். கட்சியாக இருந்து, தாம் கொண்டுள்ள கொள்கைவாத அரசியலை தெளிவாக முன்வைக்கும் போக்கில் நெகிழ்வுகளைக் காட்டாது பிடிவாதமாக இருப்பது, மக்கள் மத்தியில் அக்கட்சி பற்றிய ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

நல்லாட்சி என்ற பெயரில் உருவான கூட்டணி அரசாங்கம், மக்கள் எதிர்பார்த்த எந்தவிதமான முன்மாதிரியையும் வெளிப்படுத்தாத வங்குரோத்து நிலைக்கு சென்றுள்ளது என்பது பலரதும் ஆதங்கமாகும். நல்லாட்சி என்ற பெயரில் தோன்றி, பழைய குருடி கதைவத்திறவடி என்ற போக்கில் சாக்கடை அரசியலையே பேசியும், செய்தும் வருகின்றனர் என்பது இவர்களுக்கெதிரான குற்றச்சாட்டுக்களாகும்.

**இனம், நிறம், ஜாதி, மொழி பார்க்காமல் நல்லவர்களை அரசியல் தலைமைக்கு கொண்டுவர வேண்டும் என்ற சிந்தனைப் போக்கு நாட்டில் ஏற்பட்டு வருகின்றது. இன்றைய அரசியலில் உள்ளவர்கள் தங்களை மாற்றிக் கொள்வதற்கு, பொது மக்களிடையே வளர்ந்து வரும் இந்த மனப்பாங்கு, மாற்றம் ஓர் உந்துசக்தியாக அமைந்துள்ளது.**

மாற நினைத்தாலும் மாற முடியாதவாறு அமைந்து காணப்படும் இந்நாட்டின் பொது நிருவாக ஒழுங்கு இதற்குக் காரணமாக இருக்கலாம். அல்லது மாற்றம் எனும் வெற்று வார்த்தைகளை மாத்திரம் முன்வைத்து அரசியல் அதிகாரத்தை பெற்றுக் கொள்ளும் பசுத் தோல் போர்த்திய புலிகளாக ஆட்சியில் இடம்பித்துக் கொண்டமை காரணமாகலாம்.





தமிழ் தேசியக் கூட்டமைப்பும் தமது இனத்தின் எதிர்ப்புக்களுக்கு உள்ளாகி வருகின்றது என்பது ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் சித்தரித்துக் காட்டுகின்றன. மக்களிடம் பேசிய, தமிழினத்தின் விடிவு காக்கும் கொள்கைப் போக்கிலிருந்து நீங்கிச் செல்வதாக மக்கள் உணந்ததன் விளைவே இந்த எதிர்ப்பு என்பது பொதுமக்களின் உணர்வுகளைக் காட்டும் ஊடகச் செய்திகள் மூலம் உணர்ந்து கொள்ள முடியுமான ஒன்றாகும்.

ஜெனீவா பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கத்துக்கு காலக் கெடு வழங்க ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழு எடுத்த தீர்மானத்துக்கு, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆதரவு வழங்கியமை ஒரு பெரும் தவறாக அம்மக்கள் கருத ஆரம்பித்துள்ளனர்.

இந்நாட்டிலுள்ள முஸ்லிம் அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் முஸ்லிம்களின் தேசியப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்க கூட்டணியாக வேண்டும் என்ற கருத்து நீண்டகாலமாக அரசியல் களத்தில் முன்வைக்கப்படுகின்றது. அண்மையில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸில் கருத்து முரண்பாடு கொண்ட ஒருவரும் இக்கருத்தை கிழக்கை மையமாக கொண்ட கூட்டணி என கூறியிருந்தார்.

கட்சி அரசியலில் இருந்து விடுபட முடியாத ஒரு குறுகிய நிலைமைதான், முஸ்லிம் அரசியல் தலைமைகளை சுயநலமிகளாக செயற்பட வைத்துள்ளது என்று ஒருவர் கூறினால், சொன்னவரின் வாயில் சீனி போட பல கரங்கள் நீட்டப்படும் என்பது சந்தேகமில்லாத ஒன்றாகும்.

எமது நாட்டுக்கு தற்பொழுது முன்மாதிரி மிக்க அரசியல்வாதிகள் தேவைப்படுகின்றார்கள். தனிப்பட்ட வாழ்க்கை முதல், வீடு, சமூகம், அரசியல் மற்றும் பொது வாழ்க்கை என அனைத்திலும் சிறந்தவரையும், முன்மாதிரிமிக்க விழுமியங்களை எண்ணத்திலும், சொல்லிலும், செயலிலும் ஒன்றித்து வெளிப்படுத்தும் பக்குவமுள்ள ஒருரையுமே சமூகம் இன்று தேடுகின்றது.

ஜும்ஆ தினங்களிலும், விசேட சொற்பொழிவுகளிலும் ஆட்சியாளர் உமர் (ரழி) அவர்கள் பற்றியும், ஹாரூன் ரஷீத் (ரஹ்) அவர்கள் பற்றியும் உருக்கமான உரைகள் முழங்கப்படுகின்றன. நீதியான ஆட்சிக்கும், எளிமையான மக்கள் தொடர்புக்கும், அரச சொத்துக்களின் பரிபாலனத்துக்கும் என இத்தகைய உதாரண புருஷர்களின் வாழ்க்கை முன்மாதிரிகள் சிறந்த சான்றுகளாக கூறப்படுகின்றன.

இந்த முன்மாதிரிகள் இன்று எமது நாட்டுக்குத் தேவைப்படுகின்றன. இத்தகைய முன்மாதிரிகளைச் சுமந்தவர்கள், இதன்பிறகுதான் பிறந்து உருவாகி அரசியல் தலைமைக்கு வர வேண்டும் என்பது பாமரத்தனமான எதிர்பார்ப்பாகும் என்று பலரும் தெரிவிக்கின்றனர்.

சமகாலத்திலுள்ள முஸ்லிம் தலைமைகள் ஏன் ஓர் உமராக அரசியலில் நீதியை எளிமையாக எடுத்துக் கூறக் கூடாது. நிதிவிடயத்தில் ஊழல், திருட்டு இல்லாமலும், அரச பொதுச் சொத்துக்கள் விடயத்தில் அமானிதம் பேணியும், உண்மை, நேர்மை, துணிவு உள்ளவர்களாகவும், தாய் நாட்டையும், அனைத்து மக்களையும் நேசிப்பவர்களாகவும் ஏன் மாறக் கூடாது.

இனம், நிறம், ஜாதி, மொழி பார்க்காமல் நல்லவர்களை அரசியல் தலைமைக்கு கொண்டு வர வேண்டும் என்ற சிந்தனைப் போக்கு நாட்டில் ஏற்பட்டு வருகின்றது. இன்றைய அரசியலில் உள்ளவர்கள் தங்களை மாற்றிக் கொள்வதற்கு, பொது மக்களிடையே வளர்ந்து வரும் இந்த மனப்பாங்கு மாற்றம் ஒரு உந்துசக்தியாக அமைந்துள்ளது.

நாட்டு மக்கள் ஊழல், மோசடி கொண்ட அரசியலில் வெறுப்படைந்துள்ளனர். சுயநலத்துக்காக பொது நலன் பேசும் அரசியல் வாதிகளின் பொய்யான வாக்குறுதிகளையும், பிரச்சினைகளைச் சமாளிக்க தியாகத்தை வெளிப்படுத்தும் அரசியல் தலைமைகளின் வார்த்தைகளையும் கண்டு கண்டு மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர்.

இப்படியான ஒரு நிலையில் முன்மாதிரி மிக்க ஒரு அரசியல்வாதியை மக்கள் இரு கரம் கூட்டி வரவேற்பார்கள் என்பது சந்தேகம் இல்லாத உண்மையாகும்.

NAVAMANI DAILY
நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக் குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

Press Complaints Commission of Sri Lanka
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

# கல்முனை, சம்மாந்துறை நீர் திட்டத்தினை துரிதப்படுத்தவும்

## அமைச்சர் ஹக்கீம் அதிகாரிகளுக்கு உத்தரவு



(நாச்சியாதீவு பர்வீன்)

நகர திட்டமிடல் , நீர்வழங்கல் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டுள்ள அபிவிருத்திப்பணிகளில் கல்முனை, சம்மாந்துறை பாரிய அபிவிருத்தித் திட்டத்தை துரிதப்படுத்துமாறும், ஏற்கனவே நிறைவடைந்துள்ள செயற்றிட்டங்களை மக்கள் பாவனைக்காக கையளிப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், இவ்வருடத்திற்கான மேலதிக நிதித்தேவைகளை மதிப்பீடு செய்யுமாறும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் உயர் அதிகாரிகளை பணித்துள்ளார்.

கல்முனை அபிவிருத்தி திட்டங்கள் சம்பந்தமான மீளாய்வுக்கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் நகர திட்டமிடல், நீர்வழங்கல் அமைச்சில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற போதே அவர் இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

சவூதி அரேபியாவுக்கு மேற்கொண்டிருந்த விஜயத்தை நிறைவு செய்துகொண்டு நாடு திரும்பியவுடன் தமது அமைச்சில் நடாத்திய உயர் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின்போது அம்பாறை மாவட்டத்தில் கல்முனையை மையப்படுத்தி நகர திட்டமிடல் அமைச்சினால் ஒதுக்கப்பட்டுள்ள 160 மில்லியன் ரூபாய் செலவிலான செயல்திட்டங்கள் உட்பட ஏனைய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டன. குறிப்பாக கல்முனைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற ஏழு அபிவிருத்தி செயல் திட்டங்கள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது. அவற்றில் ஏற்கனவே நிறைவடைந்துள்ள இஸ்லாமாபாத்,பெரியநீலாவணை போன்ற பிரதேசங்களில் உள்ள சனசமூக நிலையங்கள். நற்பிட்டிமுனை அஷ்ரப் விளையாட்டு மைதானம் என்பவற்றை மக்கள் பாவனைக்கு விரைவில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. சந்தாங்கேணி மைதானத்தில் ஐக்கிய சதுக்க பார்வையாளர் கூடம் பற்றியும், கல்முனை சந்தைக்கட்டிட விவகாரம் பற்றியும் ஆராயப்பட்டது.

நகர திட்டமிடல் அமைச்சு ஒப்பந்த அடிப்படையில் இலங்கை காணி மீள்நிரப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தினூடாக மேற்கொண்டு வரும் சாய்ந்தமருது தோணாவின் இருமருங்கிலும் பாறாங்கற்களையும்,சல்லடையையும் கொண்டு எழுப்பப்படும் பாதுகாப்பு அரணை இவ்வாண்டில் நிறைவு செய்வதற்கான நடவடிக்கைளை சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் மேலதிகாரிகள், அம்பாறை மாவட்ட செயலாளர், கல்முனை மாநகர சபை ஆணையாளர், சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஆகியோரின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்குமாறு அமைச்சர் ஹக்கீம் கூறினார்.

பிரஸ்தாப தோணாவில் படர்ந்து வியாபித்துள்ள சல்வீனியா தாவரங்களை அகற்றுவதற்கும், அவற்றின் பரவலை கட்டுப்படுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அமைச்சர் தெரிவித்த போது அதில் எதிர்நோக்குகின்ற சிரமங்களை உயர் அதிகாரிகள் எடுத்துக்கூறினர். அத்துடன் காணி மீள்நிரப்புதல் பற்றி ஆராயப்பட்டதோடு ஐம்பது மில்லியன் ரூபா செலவில் இறைவெளிக்கண்டத்தில் முதல் கட்டமாக ஐம்பது ஏக்கர் நிலத்தை நிரப்புவது பற்றி சீர்தூக்கி பார்க்கப்பட்டது. அமைச்சர் ஹக்கீமின் முயற்சியின் பயனாக இப்பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளுக்கு வரவுசெலவு திட்டத்தில் 200 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சுனாமி மீள்குடியேற்ற கிராமங்களின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் பற்றியும் பேசப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அமைச்சின் செயலாளர் சரத் சந்திர சிறி விதான, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதிச் செயலாளர் நாயகமும் முன்னாள் கல்முனை நகர பிதாவுமான சட்டத்தரணி நிஸாம்காரியப்பர், அமைச்சின் மேலதிக செயலாளர் ஏ.சி.எம் .நபீல், கல்முனை மாநகர சபை ஆணையாளர் ஜே.லியாகத் அலி, அம்பாறை கச்சேரி மாவட்ட பொறியியலாளர் எம் .ஐ.எம்.ரஸீஹ். காணி மீள்நிரப்பு அபிவிருத்திக் கூட்டுத்தாபன செயல்திட்ட பொறியியலாளர் சமந்த லொகுலியன, அமைச்சரின் பிரத்தியேக செயலாளர் எம்.நயீமுல்லாஹ், இணைப்புச் செயலாளர் ரஹ்மத் மன்சூர் ஆகியோர் உட்பட உயரதிகாரிகள் பங்குபற்றினர்.

## மட்டக்களப்பில் சிறுவன் அடித்துக் கொலை

(ஏறாவூர் ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவற்குடா, மாதர் வீதியிலுள்ள வீடொன்றில் நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் அச்சிறுவனின் 50 வயது மதிக்கத்தக்க வளர்ப்புத் தாயை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் கூறினர். ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தபோதும் சிறுவன் முன்னதாகவே உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இது தொடர்பில் காத்தான்குடிப் பொலிஸாருக்கு வைத்தியசாலை அதிகாரிகள் தகவல் வழங்கினர். இதனை அடுத்து, சிறுவனை வைத்தியசாலையில் அனுமதித்த அவனது வளர்ப்புத் தாய் கைது செய்யப்பட்டுள்ளார். சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறுவனின் தலை மற்றும் முகத்தில் அடி காயங்கள் காணப்படுவதாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் இடம்பெற்ற வீட்டிற்குச் சென்று விசாரணை நடத்திய காத்தான்குடிப் பொலிஸாரும் மட்டக்களப்பு குற்றத் தடயவியல் பிரிவுப் பொலிஸாரும் அங்கிருந்து தடிகள் சிலவற்றைமீட்டுள்ளதுடன் மேலதிக விசாரணையை முன்னெடுத்துள்ளனர்.

## எரிந்த சிறகுகள் நூல் வெளியீட்டு விழா

(தியத்தலாவ எச்.எப். ரிஸ்னா)

வெலிகம ரிம்ஸா முஹம்மத் எழுதிய எரிந்த சிறகுகள் நூல் வெளியீட்டு விழா 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.15 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பூங்காவனம் இலக்கிய வட்டம் ஏற்பாடு செய்திருக்கும் இந்நிகழ்வு, தமிழ்த் தென்றல் அலி அக்பர் தலைமையில் நடைபெறும்.

இலக்கியப் புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலை வகிக்கும் இந்நிகழ்வில் கௌரவ அதிதியாக அஸ்ஸெய்யத் ஹனீப் மௌலானா, சிறப்பதிதிகளாக கொழும்புப் பல்கலைக்கழக உளவளத்துறை விரிவுரையாளர் யூ.எல்.எம். நௌபர், இப்ராஹீமிய்யா கல்லூரியின் பணிப்பாளர் வை.எம். இப்ராஹிம், எம். முஸ்லிம் ஸலாஹுதீன், அமேசன் கல்லூரி பணிப்பாளர் ஜனாப் இல்ஹாம் மரிக்கார், கொடகே புத்தக நிறுவுனர், சிரிசுமண கொடகே ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். எரிந்த சிறகுகள் வெலிகம ரிம்ஸா முஹம்மதின் 12 ஆவது நூல் என்பது குறிப்பிடத்தக்கது.

## சாய்ந்தமருது அல் ஹிலால் பாடசாலை மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி வைப்பு



(றிஸ்கான் முகம்மட்)

சாய்ந்தமருது கமு/அல் ஹிலால் பாடசாலை மாணவர்கள் கல்விச் சுற்றுலாவின் ஒரு பகுதியாக அண்மையில் இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்திற்கு விஜயம் செய்தார்.

இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தேசியப் பிரதித் தலைவருமாகிய ஏ.எம்.ஜெமீலின் ஏற்பாட்டில் இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைமைக் காரியாலயத்தில் இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் அமைச்சிற்கான மக்கள் தொடர்பு உயர் அதிகாரியும்,கூட்டுத்தாபன தலைவரின் பிரத்தியேக செயலாளருமான ஏ.எல்.முக்தாரினால் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## மீலாத் போட்டிகள்

(வெலிகம நிருபர்)

தேசிய மீலாத் விழாவையொட்டி, வெலிகம அறபா மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) முஸ்லிம் மஜ்லிஸ் ஏற்பாடு செய்துள்ள பாடசாலை மட்ட மீலாத் போட்டிகள் இன்று (16) இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் அதிபர் அஸ்ஸெய்யித் ஜே.எஸ். வாரிஸ் அலி மௌலானாவின் வழிகாட்டலில் நடைபெறும் இப்போட்டிகள், கனிஷ்ட, இடைநிலை, மற்றும் சிரேஷ்ட ஆகிய பிரிவுகளுக்கிடையில் ஆண்கள், பெண்கள் வேறாக இடம்பெறவுள்ளன. கிராஅத், அல்-குர்ஆன் மனனம், பேச்சு, கட்டுரை, சிறுகதை, அறபு எழுத்தணி ஆகிய போட்டிகளே இடம்பெறவுள்ளன. இப்போட்டிகளில் வெற்றியீட்டும் போட்டியாளர்கள் மாகாண மட்டப் போட்டிகளுக்கு தகுதி பெறுவர்.

**மர்ஹூம் நாகூர் நிகாஹ் சேவை**

**உண்மையான உறுதியான மஹர் அடிப்படையில் சிறந்த துணைகளைத் தேடித் தருவதற்கு எம்மை நாடவும். 30 வருட சேவையுடைய தர்ஹ் முகவர்** M.A.S. Hameed (p.m), No. 460A, Mosque Lane, Kalmunaikkudy - 09. (077 3249459), N. Rahmathullah (R.I.)T.P: 077 2810009.WhatsApp: 077 9697790 Email - nrahmathullah786@yahoo.com

## மாகாண வீதிப்போக்குவரத்து அநீதி குறித்து கிழக்கு தனியார் பஸ் உரிமையாளர்கள் முறைப்பாடு

(அட்டாளைச்சேனை, றிசாத் ஏ. காதர்)

கிழக்கு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபையினால், தமக்கு இழைக்கப்படும் அநீதிக்கு நியாயம் பெற்றுத் தருமாறு கோரி, தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர், நேற்று முன்தினம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை காரியாலயத்தில் முறைப்பாடொன்றினை கையளித்தனர்.

அக்கரைப்பற்றிலிருந்து திருகோணமலைக்கு வாகரை ஊடாக பயணிக்கும் தமது பஸ் வண்டிககளின் தொழில் நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில், கிழக்கு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் நடந்து கொள்கின்றமை பற்றியும், இதனால் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும், மேற்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக, தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் எஸ்.ஐ. மௌலானா தெரிவித்தார்.

ஏற்கனவே, மேற்படி பயணப் பாதையில் போதியளவான பஸ் வண்டிகள் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில், குறிப்பிட்ட பயண வழி ஊடாக சேவையில் ஈடுபடும் பொருட்டு, மேலதிகமாக பல பஸ் வண்டிகளுக்கு கிழக்கு மாகாண வீதிப்போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் அனுமதி வழங்கியுள்ளார். இதனால், ஏற்கனவே தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பஸ் உரிமையாளர்கள் எதிர்கொள்ளும் அவலங்கள் தொடர்பில், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பல முறை எழுத்துமூலம் அறிவித்திருந்தோம், கிழக்கு மாகாண முதலமைச்சரை சந்தித்து பிரச்சினைகளை தெளிவுபடுத்தியிருந்தோம். ஆயினும், எமக்கு



எவ்வித தீர்வுகளும் இதுவரை கிடைக்கவில்லை. இதனாலேயே, மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நாம் முறைப்பாடு செய்தோம் என்றும் மௌலானா கூறினார்.தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கு நிரந்தரமான தீர்வொன்றினை நாடியே, தாம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு தமது முறைப்பாட்டை கையளித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏற்கனவே இப்பயண வழியில் சேவையில் ஈடுபடும் பஸ்வண்டிகளின் நேர இடைவெளி களவாடப்படுவதாகவும், மேலும் பலவிதமான அசௌகரியங்களை தாம் எதிர்கொள்வதாகவும் தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தினர் தெரிவித்தனர்.

மேற்படி முறைப்பாட்டினை கையளிக்கும் போது, தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையார் சங்கத்தின் செயற்பாட்டாளர் எம்.எஸ்.பைறூஸ் மற்றும் நிர்வாக உறுப்பினர்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கல்முனை காரியாலயத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
நகர திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சு
தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை

National Water Supply & Drainage Board

ADB உதவும் பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சி - செயற்றிட்டம் 2

AFD ஒப்பந்த இணை நிதி - அம்பத்தலை நீர் வழங்கல் திட்ட அபிவிருத்தி மற்றும் சக்திவள சேமிப்பு செயற்றிட்டம்.

ADB கடன் இல. 3030 - SRI ;
AFD கடன் இல. :- CLK 1008 - 01P AFD கடன் வசதிகள்

**மேற்கு தயாரிப்பு நிலையத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்புக்கான இயந்திரங்கள், உபகரணங்கள்**

**ஒப்பந்த இல: GCWWMIIP / AFD / EQUIP / OPER / ICB / 06**
**கேள்விமனு கோரலுக்கான (IFB) பின்னிணைப்பு - 1**

இந்தப் பின்னிணைப்பானது **''மேற்கு தயாரிப்பு நிலையத்தின் செயற்பாடு மற்றும் பராமரிப்புக்கான இயந்திரங்கள், உபகரணங்கள்''** என்ற திட்டத்துக்கான பொருட்கள் பெறுகைக்கான மூல கேள்விமனு கோரலில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இந்த விளம்பரமானது டெய்லி நியுஸ், தினமின, நவமணி ஆகிய பத்திரிகைகள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை இணையத்தளம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி இணையத்தளம் ஆகியவற்றில் **2017 பெப்ரவரி 08** ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டது. பின்னிணைப்பு 01 ஆனது கேள்விமனு ஆவணத்தின் எல்லா தேவைகளையும் கருத்தில் கொண்டு அதன் ஒரு பகுதியாக செயற்படுகிறது.

கேள்விமனு சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி **2017 ஏப்ரல்; 07, முற்பகல் 10** வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கேள்விமனு ஆவணங்கள் சாதாரண வேலை நாட்களில் 2017 ஏப்ரல் 06 வரை, முற்பகல் 09 மணி முதல் பிற்பகல் 03 வரை சாதாரண கிழமை நாட்களில் விநியோகிக்கப்படும். தகவல்கள் இணைக்கப்பட்ட பின்னிணைப்பு, கேள்விமவுனுக்கு முந்திய கூட்டத்தில் விநியோகிக்கப்படும். ஏல முற்கூட்டத்திற்கான விளக்கங்கள் பின்னிணைப்புடன் வழங்கப்படும்.

மூல கேள்விமனு ஆவணத்தின் ஏனைய அனைத்து விதிமுறைகளிலும், நிபந்தனைகளிலும் எந்தவித மாற்றங்களும் இல்லை.

**தலைவர்,**
**திட்ட பெறுகைக் குழு** (PPC) – Major
**பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சி,**
**தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை**

# வைத்தியசாலைகளுக்குள் நோய்கள் பரவுமா?



உடல்நிலை சரியில்லாதபோது மருத்துவமனைக்குச் சென்று வைத்தியரைச் சந்திக்கிறோம். மிக மோசமான உடல்வருத்தமெனில் மருத்துவமனையிலேயே உள்நோயாளியாக சேர்க்கப்படுகிறோம். அங்கு நாம் எந்த நோயின் சிகிச்சைக்காகச் சேர்ந்தோமோ அந்த நோய் குணமாவது இருக்கட்டும்.. புதிதாக வேறு ஏதாவது நோயுடன் திரும்ப வேண்டியிருந்தால் எவ்வளவு அதிர்ச்சியாக இருக்கும்? இது என்ன கொடுமையாக இருக்கிறதே என்று அதிர்ச்சியடையாதீர்கள்.

மருத்துவமனைக்குச் செல்பவர்களில் பலர் மேலும் ஆபத்தான சில நோய்களுடன் திரும்புகிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவலை அளிக்கிறது உலக சுகாதார நிறுவனம்.

இந்த நிலைமையிலிருந்து மீள மருத்துவமனையைத் தூய்மையாகப் பராமரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் நன்கு தீர்மானிக்கப்பட்ட செயல்முறை வடிவங்களை அமுல்படுத்த வேண்டும். என்கிறார் ஐ.என்.ஐ.சி.சி எனப்படும் மருத்துவமனைத் தொற்றுநோய் கட்டுப்பாட்டுக்கான சர்வதேச நிறுவனத்தின் தலைவர் விக்டர் டி. ரோசென்தால். இவர் இப்பிரச்சினை மீது பல ஆண்டுகளாக ஆய்வு மேற்கொண்டு வருபவர். கைகளைச் சுத்தமாகப் பராமரிப்பது போன்ற தொற்றுநோய்த் தடுப்புக்கான வழிமுறைகளை சரிவரக் கடைப்பிடிக்காததாலும் பழைய தொழில்நுட்பத்தை மாற்றாமல் அப்படியே கடைப்பிடிப்பதனாலும் எச்.ஏ.ஐ. பாதிப்புகள் ஏற்படுகின்றன என்கிறார் ரோசென்தால்.

எச்.ஏ.ஐ.நோய்கள் எவை என்ற கேள்வி எழுவது இயற்கை. இரத்த ஒட்டத்தில் தொற்றும் கிருமிகள், நிமோனியா, சிறுநீர்க் குழாய்த் தொற்று, அறுவைச் சிகிச்சை நடைபெறும் இடத்தில் ஏற்படும் தொற்று போன்றவையே அவை.

20 இந்திய நகரங்களில் உள்ள 40 மருத்துவமனைகளில் 2004ஆம் ஆண்டிலிருந்து 10 ஆண்டுகளுக்கு ஆய்வுகளை நடத்திய ஐ.என்.ஐ.சி.சி 2015 ஆம் ஆண்டில் ஓர் ஆய்வறிக்கையை வெளியிட்டது. அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த 2,36,700 நோயாளிகளிடமிருந்து விபரங்கள் சேகரிக்கப்பட்டன. மருத்துவமனைகளில் அன்றாடம் கூடும் மக்கள் கூட்டத்தின் காரணமாக பல தூய்மைப் பராமரிப்பு நடவடிக்கைகள் கைவிடப்படுகின்றன. இப்பெரும் கூட்டத்தை சமாளிக்கும் அளவுக்கு மருத்துவமனை ஊழியர்களின் எண்ணிக்கை இல்லாதது மக்களுக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடியது. அவசர சிகிச்சைப் பிரிவில் மூன்று படுக்கைகளுக்கு ஒரு செவிலியர் என்பது போதுமானதே அல்ல. பொதுசுகாதாரத்திற்கு குறைவான நிதியே ஒதுக்கப்படுவதால் போதுமான எண்ணிக்கையில் ஊழியர்கள் நியமிக்கப்படுவதில்லை. அவர்களுக்கு சரியான வழிகாட்டுதல்கள், முறையான பயிற்சி, சரியான கல்வி, நோயாளிகளிடம் கடைப்பிடிக்க வேண்டிய அணுகுமுறை, காலத்துக்கேற்ற நவீன தொழில்நுட்பம் ஆகிய எல்லா அம்சங்களிலும் குறைபாடுகள் இருக்கின்றன. இவையெல்லாம் விரைவில் சரிசெய்யப்பட வேண்டும் என்கிறார் ரோசென்தால்.

நடைமுறையில் உள்ள சிகிச்சை முறைகளுக்கேற்ப தங்களை மாற்றிக் கொண்டு தன்இயல்புமாற்றம் (mutation) அடையும் நுண்ணுயிரிகளை எதிர்க்க, உரிய சிகிச்சை முறைகளை உடனுக்குடன் கண்டுபிடிக்க வேண்டிய நெருக்கடியில் முன்னெப்போதையும் விட தற்போது நோயியல் வல்லுநர்கள் இருக்கின்றனர். ஒரு அறுவை சிகிச்சைக்குப் பிறகோ, மருத்துவமனைக்கு அடிக்கடி சென்று வருவதாலோ உடலில் எதிர்ப்புசக்தி குறைவாக உள்ள நோயாளிகளே புதிய தொற்றுநோய்க்கு ஆளாகின்றனர். ஆன்ட்டிபயாடிக்



மருந்துகளை அதிக அளவில் பயன்படுத்த வேண்டாம். தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்து எச்.ஏ.ஐ பாதிப்புகளைக் குறைக்க வேண்டுமே தவிர, தொற்று நோயைப் பரவவிட்டு அதன் பிறகு அன்ட்டிபயடிக் மருந்துகளைக் கொடுத்துக் கொள்ளலாம் எனக் காத்திருப்பது சரியல்ல என்று மருத்துவர்களை எச்சரிக்கிறார் ரோசென்தால்.

(நன்றி தி இந்து)




## ஆஸ்துமாவை தவிர்க்கும் உணவு வகைகள்

ஒரு சிலருக்கு ஒவ்வாமை ஏற்படும் போது ஆஸ்துமா பிரச்சினை ஏற்படும். இந்த பிரச்சினையால் அவதிப்படுபவர்கள் சேர்க்கவேண்டியவை, தவிர்க்க வேண்டியவை என்னவென்று பார்க்கலாம்.

நுரையீரல் அலர்ஜி, தொற்று மற்றும் சுற்றுச்சூழலால் ஆஸ்துமா ஒவ்வாமை ஏற்படுகிறது. சேர்க்க வேண்டியவை:- காலையில் பல் துலக்கியதும் 2 முதல் 3 கப் வெதுவெதுப்பான நீர் அருந்தவேண்டும். பால் கலக்காத தேநீர். இரவில் நல்ல விசிங் (ஆஸ்துமா) இருந்து சிரமப்படும்போது, கற்பூரவல்லி, துளசி, கரிசலாங்கண்ணி என இந்த இலைகளை கொஞ்சம் எடுத்து கஷாயமாக வைத்து இனிப்பிற்குத் தேன் சேர்த்து குடிக்கலாம்.



நெஞ்சில் சளி இலகுவாக வெளியேறி சுவாசப் புத்துணர்ச்சி கிடைக்கும். மாலையில் தேநீரோ / சுக்குக் கஷாயமோ எடுப்பது, இரவு சிரமத்தைக் குறைக்கும். மலைவாழைப்பழம் தினசரி மாலை வேளையில் சாப்பிடலாம்.

எளிதில் செரிக்கக்கூடிய புழுங்கல் அரிசிக் கஞ்சி, சிவப்பரிசி அவல், மிளகு ரச சாதம், இட்லி என ஏதாவது ஒன்றை சாப்பிடுவது நல்லது. மதிய உணவுக்குப் பிறகு வெற்றிலை போடுவது நல்லது.

தவிர்க்க வேண்டியவை: மதிய உணவில் நீர்ச்சத்துள்ள சுரை, புடலை, சௌசௌ, தயிர் இவற்றைத் தவிர்க்கவேண்டும். படுக்கைக்குப் போகும்போது காலி வயிறு ஆஸ்துமாவை நன்கு கட்டுப்படுத்தும். இனிப்புப் பண்டங்கள், எலுமிச்சை, திராட்சைப் பழங்களை மருந்து எடுத்து வரும் காலத்தில் முற்றிலும் தவிர்க்க வேண்டும்.

## உடற்பயிற்சிக்கு இடையில் ஓய்வு தேவையா?

சீரான மூச்சில் இருந்து உடற்பயிற்சிக்கான மூச்சுத் திறமையை வளர்த்துக் கொள்ள 6 முதல் 8 வாரங்கள் தேவை. அப்போது மெதுவான நடை, வேகநடை, மெது ஓட்டம், மித ஓட்டம், வேக ஓட்டம் என உங்கள் வயதுக்கேற்ப தொடங்க வேண்டும்.

உடற்பயிற்சிக்கான சற்று அதிக பளுவை தாங்கக்கூடிய இதய வலிமை, நுரையீரல் வலிமை, எலும்புகள் இணையுமிடங்களின் வலிமை, தசைகளின் வலிமை, மன வலிமை என அனைத்தையும் படிப்படியாக மூச்சுத் திறமையால் கையாள தொடங்கவேண்டும் 20 வயது இளைஞர் உடற்பயிற்சியில் ஈடுபடுவதாகக் கொள்வோம்.

அவரது உடல் வலிமை, இளமையின் காரணமாக மூச்சுத் திறனை மேம்படுத்திய பிறகு, வேக ஓட்டம், கடின உடற்பயிற்சி செய்யும் போது, அந்த இளைஞர் அதிகமான இதயத் துடிப்பை தாங்கக்கூடிய வலிமையைப் பெறுவார். அதே நேரம் 70 வயதுடைய வயோதிகபர் உடற்பயிற்சி செய்யும் போது, மிக அதிக இதயத் துடிப்பு உண்டாவதைத் தவிர்க்க வேண்டும்.

முதல் 8 வாரங்கள் உடற்பயிற்சியை மெதுவாக, சிறியதாகத் தொடங்கி, சீராகக் கூட்டி - ஆனால், தொடர்ச்சியாக அடுத்த 24 மணி நேரத்துக்குள் அல்லது அதிகபட்சம் 48 மணி நேரத்துக்குள் மீண்டும் தொடர்வது மிக அவசியம். தொடர்ந்து உடற்பயிற்சி செய்வதால் உடல், மன வலிமை கூடிக்கொண்டே இருப்பது உண்மை. சில ஆண்கள் 10 மணி நேரம் ஜிம்மில் தண்ணீர் கூடக் குடிக்காமல் உடலை வதைக்கின்றனர். உடலுக்கு ஓய்வே இல்லாமல், உடலை வதைத்து, கொடுமைப்படுத்துவதையும் நம் உடல் விரும்பாது. நம் உடல் சில நேரங்களில் சிறிய, பளு குறைந்த வேலைகளையும் சில நேரங்களில் சற்று அதிக பளு உடைய வேலைகளையும் மாறி மாறிச் செய்து, சற்று ஓய்வுக்குப் பிறகு மீண்டும் செய்வது நல்லது.




## பார்வையற்றோருக்கு உதவும் APOLY

செல்போன்களின் பயன்பாடுகள் எந்த அளவுக்கு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகிவிட்டதோ அதேபோல் செல்போன் சிறப்பாக இயங்குவதற்கு நாள்தோறும் புதுப்புது செயலிகள் உருவாகி வருகின்றன. நம்முடைய ஒவ்வொரு வேலையையும் இந்த செயலிகள் எளிமையாக்கி வருவதால் இந்த தொழில்நுட்பம் அனைவராலும் பாராட்டப்பட்டு வருகிறது

இந்நிலையில் பார்வையற்றவர்களுக்கு உதவும் வகையில் சந்தையில் ஒரு புதிய செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. APOLY என்று அழைக்கப்படும் இந்த செயலியை பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் செல்போனில் பதிவிறக்கம் செய்து கொடுத்தால் அவர்கள் தங்களுக்கு எதிரே இருக்க கூடிய பொருள் என்ன என்பதை அறிய முடியும்.

அதுமட்டுமின்றி தாங்கள் அறிய விரும்பும் பொருளின் பெயரை மொபைல் குரலால் சொல்ல அதை அவர்கள் கேட்க முடியும்.

இந்த 'APOLY' செயலி எதிரே இருக்க பொருளை ஸ்கேன் செய்து அதனுடைய பெயரை துல்லியமாக குரலில் கொடுக்கும் தொழில்நுட்பத்தால் வடிவமைக்கப்பட்டு உள்ளது. இந்த செயலி இப்போதைக்கு 7 மொழிகளில் பொருட்களின் பெயரை சொல்லும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில் இன்னும் அதிக மொழிகள் இதில் இணைக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

இந்த செயலிக்கு பார்வையற்றவர்கள் பெரும் வரவேற்பை கொடுத்துள்ளனர். மேலும் இந்த செயலில் தற்போதைக்கு ஐஓஎஸ் இயங்குதளம் கொண்ட செல்போனுக்கு மட்டுமே அறிமுகப்படுத்தப்பட்டிருக்ககூடிய விரைவில் ஆண்ட்ராய்டு இயங்குதள செல்போனிலும் இயங்கும் வகையில் மாற்றப்படவுள்ளதாகவும் கூறப்படுகிறது.



## 'வாசிப்பே நம் சுவாசிப்பு"



நாம் சிறுவயது முதலே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஓய்வு நேரங்களில் சிறந்த புத்தகங்களை நாம் வாசிப்பதால் நமது அறிவு விருத்தியடைவது மாத்திரமல்லாது ஓய்வு நேரத்தையும் பயனுள்ளதாக்கிக் கொள்ள முடியும். ''நண்பர்கள் பலர் நமக்குத் துன்பம் நேரும் போது நம்மை விட்டுப் பிரிகின்றனர். ஆனால், எச்சந்தர்ப்பத்திலும் நம்மை விட்டுப் பிரியாத நண்பர்கள் புத்தகங்களே'' என்கிறார் ஒரு அறிஞர்.

உண்மையிலேயே புத்தகம் என்பது காரிருளில் செல்பவர்களுக்குப் பேரொளியாகவும் வழி தவறியவர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழும். எப்போதென்றால் புத்தகம் வாசிக்கப்பட்டால் மாத்திரமே. புத்தகங்களை வாசிக்க வேண்டும் என்பதற்காக் தேவையற்ற புத்தகங்களையெல்லாம் வாசித்தல் கூடாது. மாறாக, எமக்குத் தேவையான, தகுதியான புத்தகங்களைத் தெரிந்தெடுத்து வாசிக்க வேண்டும். வாசிப்புப் பழக்கத்தால் எமது அறிவூற்று பெருக்கெடுக்கும். எமக்குத் தகுதி வாய்ந்த புத்தகங்களைத் தெரிவு செய்வதற்கு நாம் தெரிந்திருக்க வேண்டும். அறிவியல் நூல்கள், மாமேதைகளின் சரித்திர நூல்கள், சமய சம்பந்தப்பட்ட நூல்கள் என்பன எமது அறிவுப் பசிக்குத் தீனி போடுவதாய் அமைய வேண்டும்.

அன்று பல்வேறு துறைகளில் அறிஞர்கள் உருவாகினாலும் அவர்களுக்கு வாசிப்பதற்குப் போதிய நூல்கள் காணப்படவில்லை. ஆனால், இன்றோ வாசிப்பதற்கு இலட்சக்கணக்கான புத்தகங்கள் குவிந்து கிடப்பினும் அனேகர் அவற்றை உதாசீனப்படுத்துகின்றனர். அன்று புத்தகம் இல்லாமல் நாம் அழுதோம்; இன்றோ 'என்னை வாசிப்பதற்கு யாரும் இல்லையே' என்று புத்தகங்கள் ஏங்குகின்றன. அந்தளவுக்கு இன்று புத்தகங்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக மாறியிருக்கின்றன.

புத்தகத்தின் மகிமையை அனேகர் உணர்ந்தபாடில்லை. இன்று பெரும்பாலானோர் தமது ஓய்வு நேரத்தில் வீண் விளையாட்டுக்களிலும் கேளிக்கைகளிலுமே ஈடுபடுகின்றனர். பாடசாலை நேரங்களில் மட்டுமே படிப்பது; மற்றைய நேரங்களில், மற்றைய இடங்களில் வீண்கூத்துக்களில் ஈடுபடுவது என்று இன்றைய இளம் சமுதாயத்தினர் தமது வாழ்க்கையை வகுத்துள்ளனர்.

இந்நிலை மாற வேண்டும். வாசிப்பின் பயனை இவ்வுலகிலுள்ள அனைவரும் உணர வேண்டும். நூல்கள், நூலகங்களில் தூசு படிந்து இருக்கக் கூடாது. வீடுகளில் புத்தகங்கள் அலங்காரப் பொருளாகவன்றி அறிவைப் பெறும் பொருளாக மாற வேண்டும். இவை அனைத்தும் நிகழ வேண்டுமாயின் மானிடர்களின் உள்ளத்தில் அறிவுத் தாகம் உணரப்பட வேண்டும்.

'வாசிப்பு மனிதனைப் பூரணமாக்குகிறது' வாசிப்பினை ஊக்கப்படுத்த சில பரிந்துரைகள்:

1. புத்தக வாசிப்பின் அவசியத்தை எல்லா இடங்களிலும் உணர்த்த வேண்டும். வீடு, அலுவலகம், பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, பேருந்து நிலையம், ரயில் நிலையம் போன்ற இடங்களில் இதற்கான விழிப்புணர்வு வாசகங்கள் இடம்பெற வேண்டும்! ''வாசிப்பே நம் சுவாசிப்பு'' ''பேசாத நல்ல நண்பன் புத்தகம்''; ''புத்தகம் செலவாகாத செல்வம்''; ''வாசிப்பு அறிவின் திறவுகோல்'' –போன்ற வாசகங்களை ஓட்டி வைக்கலாம்.
2. வீடு, பள்ளிவாசல், அலுவலகம் ஆகிய இடங்களில் நூலகம் உருவாக்கலாம்.
3. பெரிய நூலகங்களுக்குச் செல்லும் பழக்கத்தை மேற்கொள்ளலாம்.
4. நாள்தோறும் அரைமணி நேரமாவது வாசிக்க நேரம் ஒதுக்கலாம்.
5. நாம் வாசிப்பதோடு மற்றவர்களையும் வாசிக்கத் தூண்டலாம்.

எனவே, இவ்வுலகிலுள்ள அனைவரும் ஓய்வு நேரங்களில் வாசிப்புப் பழக்கத்தை உண்டாக்கிக் கொள்வதன் மூலம் நாமும் ஒரு பூரண மனிதராக வாழ முயற்சிப்போமாக!

★★★

## லைவ் வீடியோவை அறிமுகம் செய்யும் டுவிட்டர்

டுவிட்டர் பொதுவாக பிரபலங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் பலர் அதிகமாக பயன்படுத்தும் சமூக வலைதளமாக இருந்து வருகிறது. ஃபேஸ்புக் நிறுவனம் தான் முதன் முதலில் இந்த லைவ் வீடியோ சேவையை அறிமுகம் செய்தது.

ஆனால் இந்த சேவை பயனாளர்கள் முழுமையாக பயன்படுத்த முடியவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது குறிப்பிடத்தக்கது. வெகு நேரம் லைவ் வீடியோ செய்ய முடியவில்லை என்ற கருத்து பரவி வந்தது.

இந்நிலையில் தற்போது டுவிட்டர் நிறுவனம் லைவ் வீடியோ சேவை அறிமுகம் செய்துள்ளது. ஆண்ட்ராய்ட் மற்றும் IOS பயனர்கள் என அனைவரும் இந்த சேவையை பயன்படுத்தலாம். இதற்கு முன்னர் Periscope வாயிலாக மட்டுமே ட்விட்டரில் லைவ் வீடியோ பகிர முடிந்தது.

இனி பிரபலங்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் அவர்களது அறிவிப்புகளை டுவிட்டரின் இந்த லைவ் வீடியோ சேவை மூலம் வழங்கவும் வாய்ப்புள்ளது.



## பாதுகாப்பு பட்டன்

ஒன்போன் என்கிற நிறுவனம் எஸ்ஓஎஸ் (SOS) பாதுகாப்புக்கு என்று சிறிய பட்டன் போன்ற கருவியை தயாரித்துள்ளது. இதில் உள்ள பட்டன் அழுத்தப்பட்டால், உதவி தேவைப்படுபவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை ஸ்மார்ட் போன் மூலம் கண்டுபிடிக்கலாம்.



# குண்டுச் சட்டிக்குள் குதிரையோட்ட விரும்புகிறதா முஸ்லிம் கூட்டமைப்பு?

ஏ. பீர் முகம்மது

அரசியலில் கட்சிகள் ஒன்றிணைவதும் கூட்டுச் சேர்வதும் புதுமையான விடயங்கள் அல்ல. சிங்களக் கட்சிகளிடையேயும் தமிழர்களுக்கு மத்தியிலும் மலையகத்திலும் அரசியல் கூட்டமைப்புகள் உள்ளன.

அந்தவகையில் முஸ்லிம் கட்சிகள் ஒன்றுசேர்ந்து அரசியல் கூட்டமைப்பை உருவாக்குவது சாத்தியமே. முஸ்லிம்களிடையே கட்சிகள் அதிகரித்துவரும்நிலையில் இது சாதகமாகப் பார்க்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும்.

கடந்த சில நாட்களாக அரசியல்வாதிகளாலும் முஸ்லிம் மக்களாலும் மிகவும் பரவலாகவும் பரபரப்பாகவும் பேசப்பட்ட இந்தக் கூட்டமைப்பானது கொள்கை கோட்பாடுகளை வரையறுத்து உறுதிப்படுத்தப்பட்ட எந்த முடிவுகளையும் இன்னமும் பகிரங்கமாக அறிவிக்கவில்லை.

எனினும் மு.கா.வின் தலைமைக்கு எதிராக மக்களை அணிதிரட்டுதல் என்பதில் முஸ்லிம் கூட்டமைப்பு தெளிவாக உள்ளது.

மு.காவின் தவிசாளர் பதவியிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்ட பசீர் சேகுதாவூத் ஏனைய கட்சிகளோடு பேச்சுவார்த்தைகளை நடாத்தி இக்கூட்டமைப்பின் ஏற்பாட்டு, வேலைகளைச் செய்து வருகிறார்.

முகா ஆதரவாளர்களிடையே ஹசனலிக்குள்ள அநுதாபமும் ஆதரவுத் தளமும் இக்கூட்டமைப்புக்குப் பலம் சேர்க்கும் என்று கருதப்படுகின்றது. அண்மையில் நிந்தவூர், பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் நடைபெற்ற ஹசனலி ஆதரவுப் பொதுக்கூட்டங்களில் மக்கள் திரண்டு நின்று ஆதரவு தெரிவித்தமை அவர்மீதான அநுதாபமாகவும் முகா மீதான அதிருப்தியாகவும் பார்க்கப்பட வேண்டும். இக்கூட்டங்களின் வெற்றியானது முஸ்லிம் கூட்டமைப்பின் வெற்றிக்கு வழி திறந்து விடும் என்று மக்களை யோசிக்கத் தூண்டியுள்ளது.

ஆனாலும் முஸ்லிம் அரசியல் கூட்டமைப்பு தொடர்பான கொள்கைகள் தெளிவாக இறுதி வடிவம் பெறாதநிலையில் இன்னமும் தான் அதில் இணைந்து கொள்ளவில்லையென்றும் கரையோர மாவட்டக் கோரிக்கையை முன்வைக்கும் எந்தக் கூட்டணியுடனும் இணைந்து கொள்ளத் தயாரென்றும் ஹசனலி தெரிவித்துள்ளார்

அத்துடன் முஸ்லிம்களுக்கான அரசியல் கூட்டமைப்பு கிழக்குக்கு மட்டுமா



என்ற முக்கியமான கேள்வியும் பரவலாக இப்போது கேட்கப்படுகின்றது. கிழக்குத் தலைமை என்றொரு பதம் அடிக்கடி கூட்டமைப்பு ஆதரவாளர்களால் பயன்படுத்துவதே இக்கேள்வியின் பின்னணியாகும்

முகாவின் தலைவர் ஹக்கீம் கிழக்கு மாகாணத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களை ஒவ்வொருவராக வெளியேபோடும் வகையில் நிகழ்ச்சி நிரலொன்றை முன்னெடுத்து வருகிறார் என்ற எண்ணம் பலரிடம் உண்டு.

எனவே ஹக்கீமை வெளியில் வைத்துவிட்டு கிழக்கில் பிறந்து இங்கேயே வாழும் ஒருவராலேயே இங்குள்ளவர்களின் பிரச்சினைகள் உணரப்படவும் தீர்க்கப்படவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவும் முடியும் என்று கூட்டமைப்பு கருதுகின்றது.

இதன் காரணமாக கூட்டமைப்பின் தலைமையை கிழக்கிற்குள் தேடுவதாக தெரிகிறது.

இதற்கு எதிர்வினையாகவும் கருத்துக்கள் உண்டு. வடக்கிலும் கிழக்கிலும் வாழும் முஸ்லிம்களின் பிரச்சினைகள் ஒரே மாதிரியானவை.

காணிப்பிரச்சினை, மீள்குடியேற்றம், சிலைவைப்பு, புனிதபிரதேசம் என்று அவை நீண்டு செல்லும். எனவே முஸ்லிம்களை வடக்கு, கிழக்கு என்று வேறுபடுத்துவது அர்த்தமற்ற செயலாகும் என்ற கருத்தும் உண்டு.

எமக்குத் தெரிந்த தகவலின் அடிப்படையில் தேசிய காங்கிரசின் வாக்குகள்மீதும் அதன் தலைமையின்மீதும் கூட்டமைப்பு ஏற்பாட்டாளர்கள் கூடுதல் கரிசனை காட்டுவதாகத் தெரிகிறது. அவ்வாறான ஒரு முயற்சி தவிர்க்க முடியாததுதான். ஆனால் குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டாமல் 'கூட்டமைப்பின் தலைமை கிழக்குக்கே' என்பதிலிருந்து வெளியேறி வடக்கு கிழக்கு மாநிலத்தில் பொருத்தமான தலைமையை அணுகுவதே கூட்டமைப்பின் வெற்றியை இலகுவாக்கும்.

கவனத்திற் கொள்ளவேண்டிய இன்னுமொரு விடயமும் உள்ளது. உத்தேச முஸ்லிம் கூட்டமைப்பில் முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்துவமாக இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் சக்தியாகத் திகழும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசின் பலம் ஏற்கப்படுதலே எதார்த்தமாகும்.

ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அ.இ.ம.கா மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் ஒவ்வொரு பாராளுமன்றப் பிரதிநிதியைக் கொண்டுள்ளது. அத்துடன் வடக்கில் வன்னி மாவட்டத்தில் ஒரு உறுப்பினருமாக மொத்தம் பாராளுமன்றத்தில் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கட்சியாகும்.

மட்டுமல்லாமல் அம்பாறை மாவட்டத்தில் முதல் தடவையாகப் போட்டியிட்டு 33000 க்கும் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருந்தும் நூலளவு இடைவெளியில் 3000 ஐ அண்மித்த வாக்குகள் போதாமை காரணமாக ஒரு பிரதிநிதித்துவத்துக்கான வெற்றியைத் தவறவிட்ட கட்சியாகும்

எனவே முஸ்லிம் கூட்டமைப்பின் தலைமை என்பது அகில இலங்கை மக்கள் காங்கிரசுக்கு வழங்கப்பட வேண்டும் என்ற சிலரின் கோரிக்கை நியாயமானதாகவே தெரிகிறது. இந்த நியாயத்தோடு ரிஷாட்டின் தாய் வழி உறவினர்கள் கிழக்கில் இருப்பதும் வாழ்விடம் வடக்கில் இருப்பதும் அவரின் பலமாகும்.

இவற்றையெல்லாம் கவனத்திற் கொண்டு முஸ்லிம்களிடையேயான அரசியல் பிளவுகள் ஓரங்கட்டப்பட்டு, வடக்கு கிழக்கு மாநிலத்துள் தலைமை என எல்லைகள் விஸ்தரிக்கப்பட்டு, கூட்டமைப்புக்கான தலைமை இனங்காணப்படுமானால் முஸ்லிம் அரசியல் கூட்டமைப்பு செல்லும் திசையில் மக்கள் பயணிக்க விருப்பம் கொள்ளலாம் என்பதே எமது கணிப்பாகும்.

# அரசியலமைப்பு அரசாங்கத்தை மீளக்கட்டியெழுப்புதல்

சூரி ரத்னபால

(நேற்றைய தொடர்ச்சி...)

இதனால் நாட்டின் சந்தைப் பொருளாதார அமைப்பிலிருந்து சோசலிஷ வகை கட்டளைப் பொருளாதாரத்திற்கு மாற்றப்பட்டது. எனவே பொருளாதாரத்தின் சகல பிரதான துறைகளும் தேசிய மயமாக்கப்படல் - பொதுமக்கள் போக்குவரத்து முறைமை, வங்கிகள், காப்புறுதிக் கைத்தொழில், மொத்த விற்பனை வியாபாரம் எல்லாவற்றிற்கும் மேலான சேதத்தை ஏற்படுத்தல் நாட்டின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாகிய பெருந்தோட்டத்துறை - மூலம் மக்கள் பகிரங்க ஊழியர்களின் குடித்தொகையாக மாற்றப்பட்டனர். விலை, வாடகை, வீட்டுரிமை, இறக்குமதி மற்றும் நாணய மாற்று வீதம் ஆகியவற்றின் மீதான கட்டுப்பாட்டினால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் வெளியேற்றப்பட்டனர். அத்துடன் உள்நாட்டு தொழில்முயற்சிகளுக்கும் தடை ஏற்பட்டது. பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகள் அதிகளவு வேலைவாய்ப்பு பெற முடியாத பொது கலை மற்றும் விஞ்ஞான பட்டதாரிகளை உருவாக்கியதால், அரசாங்கம் அவர்கள் வீதிக்கு இறங்காமல் செய்வதற்கு பல வேலைவாய்ப்புகளை உருவாக்கியது. இளைஞர் படையணி கதவு திறத்தல், உயர் அதிகாரிகளுக்கு தேநீர் வழங்குதல் மற்றும் ஒரு கூடத்திலிருந்து மறு கூடத்திற்கு ஆவணங்களைக் கொண்டு செல்லல் தவிர எவ்வித பணியையும் அவர்கள் மேற்கொள்ளவில்லை. உண்மையான வருமானம் குறைவடையத் தொடங்கியது எவ்வாறெனில் பொருளாதாரம் சுருங்கத் தொடங்கி அது பல சிறிய சிறிய கூறுகளாகப்பட்டமையாலாகும். அத்தியாவசிய பண்டங்களுக்குத் தட்டுப்பாடு நிலவியதால் மக்கள் நீண்ட வரிசையில் அவற்றைக் கொள்வனவு செய்தனர். தமிழ் இளைஞர் மிகவும் கஷ்டப்பட்டனர். தனியார்துறை வேலைவாய்ப்புகள் குறைவடைந்ததோடு, பகிரங்க சேவையில் மொழிக் கொள்கை அமுல்படுத்தியதால் தமிழ் இளைஞர் படிப்படியாக அரச சேவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். அரசாங்கத்தை எதிர்பார்த்து மானசீகமான வாழ்க்கைக்காக பகிரங்க சேவையாளர்கள் உள்ள மக்களின் முயற்சிகள் தொடர்பில் அரசியலமைப்பு அரசாங்கம் மீது ஏற்பட்ட தாக்கம் பற்றி கற்பனை செய்வது கடினமானதல்ல.

இலங்கையின் கசப்பான படிப்பினையின் வெளிப்பாடு யாதெனில், நிறுவனங்களை அழிப்பதென்பது இலகுவாயினும் அவற்றை மீளக் கட்டியெழுப்புதல் செயன்முறை சிவில் யுத்தம் மற்றும் பயங்கரவாதம் காரணமாக பாரிய பின்னடைவை எதிர்கொண்டது. தற்போது உருவாகிவரும் தேசிய தலைமைத்துவமானது சந்தைகள் மற்றும் சட்ட ஆட்சியின் அடிப்படைகள் பற்றி புரிந்துகொள்ளும் சமிக்ஞைகள் தென்படுகின்றன. அத்துடன், அவர்கள் சமாதானத்தை மேற்கொள்வதற்கும் நிறுவனங்களை மீளக்கட்டியெழுப்புவதிலும் முன்னேற்றம் கண்டுள்ளனர். எனவே, இலங்கையர் தாக்குப்பிடிக்கும் திறன் மற்றும் தாராளமய வாதத்தின் தத்துவம் என்பவற்றிற்கு நிலைத்துள்ள உதாரணமாக மாறுவதற்கு அவர்களுக்கு உற்சாகம் மற்றும் ஆதரவு தேவைப்படுகிறது.

## அரசியலமைப்பு அரசாங்கத்தை மீளக்கட்டியெழுப்புதல்

உலகின் சில பகுதிகளில் அரசியலமைப்பு அரசாங்கம் பற்றி மிக உறுதியான ஆலோசனை வழங்கப்பட்ட போதிலும், அது ஏனைய இடங்களில் தொடர்ச்சியான போராட்டத்திற்கு உட்படுகிறது. சர்வாதிகாரத்தின் பல்வேறு வகைகள் சனநாயகத்தின் பல்வேறு வகைகளால் பிரதியீடு செய்யப்பட்டுள்ளது. சனநாயகத்தில் பொருளாதாரத்திலிருந்து அரசாங்கம் வாபஸ்பெற்ற சில விடயப்பரப்புகள் தொடர்பில் ஒப்பந்தம், நியாயம், உடைமை ஆகியன பற்றிய பொதுச் சட்டம் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பியுள்ளது (மீட்டெடுக்கப்பட்டுள்ளது). அரசாங்கத்தின் அளவு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) சதவீதமாகக் கணிப்பிடப்பட்ட போதிலும் அது குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைவடையாது. அரசாங்கத்தின் பண்புகள் பல நாடுகளில் மாற்றமடைந்துள்ளன. இது Hayek போன்ற தாராளமயவாத சிந்தனையாளர்களின் கடின உழைப்பினால் பெறப்பட்ட இலாபமாவதோடு புலமையாளர்களின் சிந்தனையை கிளறச்செய்து தலையீடு செய்யும் நிலைக்கு ஆதரவளித்து வரையறையுடைய சட்ட ஆளுகைக்கு உட்பட்ட அரசுக்கான பொருளாதார வாதங்களையும் வழங்கினர். Hayek, Fukuyama மற்றும் ஏனைய முற்போக்குச் சிந்தனையாளர்களின் ஆக்கபூர்வமான சமூகமுறைமைகளின் பகுத்தாய்வின் மூலம் இத்தகைய திருத்தங்கள் நடைபெறுவது பற்றி விளக்கமளிக்கப்படுவது தவிர்க்க முடியாது.

Hayek (அவருக்கு முன் Car Menger மற்றும் Scotland முற்போக்குச் சிந்தனையாளர்கள்) சுட்டிக் காட்டியது போல், சமூகங்களின் சுய கட்டளையிடும் தரம் அதைக் கையாளுவதன் மூலம் அகற்றப்பட முடியாது. நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட சமூகங்களிலும் கூட, ஸ்ரலின் - கமியூனிஸ்ட் ஆட்சி போன்றவற்றில் சுயகட்டளையிடும் சென்றமுறையிலிருந்து விடுபட முடியவில்லை. பழைய நகரங்களைப் பிரதியீடு செய்வதற்கு புதிய நகரங்கள் தோன்றின. அரச ஏகபோக உரிமையுடைய அடிப்படை பண்டங்கள் மற்றும் சேவைகள் பற்றிய விடயத்திலும் பிரத்தியேக பரிவர்த்தனை ஒழிக்கப்படவில்லை. பொருளாதாரம் திட்டமிட்ட விதத்தில் நடைபெறவில்லை.

அத்துடன், பொதுவாக மக்களுக்கு அதன் பயன்கள் கையளிக்கப்படவுமில்லை. மிக முக்கியமானது என்னவெனில், அரசாங்க இழப்பு குறைப்பிற்கான சிறந்த முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், சமூக முறைமையானது தொடர்ந்தும் வெளிமூலங்களிலிருந்து தகவல்களைப் பெற்றவண்ணமிருந்தது. ஸ்ராலின் அரசாங்கம் அதன் திடீர்சரிவு ஏற்படுவதற்கு முன் மீள் கட்டளையிடுதலை நிறுத்தவில்லை என்பது பற்றி மேற்கத்தைய புலமையாளர்கள் மற்றும் ஊடகங்கள் அவதானிக்கத் தவறிவிட்டன.

மேற்கத்திய சனநாயகத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் குறைந்த அளவில் குறிப்பிடத்தக்கவையாக இருந்தபோதிலும் அவை சுவாரசியமானவை. நலன்புரி அரசுகள் / மாநிலங்கள் விரும்பத்தக்க அளவில் காலணித்துவமுறையை நீக்கி சர்வதேச வர்த்தகத்தை சுதந்திரமாக்கிய போதும் நலன்புரியற்ற அரசு / மாநிலங்களிலிருந்தான சர்வதேச போட்டித்தன்மைக்கு இயைந்து செல்ல முடியவில்லை. மேலும் நலன்புரி அர'களின் செலவுமிக்க தலையீடு நிறைந்த அம்சங்கள் அதிகளவில் அங்கு காணப்பட்டது. பாதுகாப்புச் சுவர்களின் பின்னால் தமது குறுகிய கால நன்மை தொடர்பில் கட்டியெழுப்ப முற்பட்ட நாடுகள் சந்தை மற்றும் முதலீடு தொடர்பில் தேர்தல் தொகுதியில் பங்கீடுபாடுகள் ஒழுங்கமைக்கப்பட்ட அரசு / மாநிலங்களின் நிலைத்து நிற்க முடியாமை வெளிப்படையாக அறிய முடிந்தது. கட்டமைப்பு மறுசீரமைப்பு மூலம் அரசியல்வாதிகள் தமது வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. நலன்புரி அரசு / மாநிலத்தை உருவாக்கிய சுதேச சனநாயக முறைமைகள் ஜனாதிபதி றேகன், பிரதம அமைச்சர் தச்சர் மற்றும் இறுதியாக மூன்றாவது வழிமுறை அரசியல்வாதிகளையும் உருவாக்கியது. அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து ஆகிய நாடுகளில் மறுசீரமைப்பு செயன்முறைகள் கொன்சவேட்டிவ் அல்லது லிபரல் கட்சியால் அல்லது லேபர் (தொழிற்சங்க) கட்சி அரசாங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மேலும், லேபர் கட்சியின் பொருளாளராகிய Paul Keating என்பவரின் பிரபல எச்சரிக்கையில் மறுசீரமைப்பு அற்ற தேர்தல் தொகுதியானது, அவுஸ்திரேலியா Banna குடியரசு அந்தஸ்திற்கு முன்னோக்கிச் செல்வது போல் உள்ளது எனக் கூறினார்.

(தொடரும்)

# நல்லாட்சி அரசாங்கத்தில் மக்களுக்கு அதிக சுதந்திரம்

## பிரான்ஸ் கூட்டத்தில் எஸ்.எம்.மரிக்கார்



இந்த அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள பயணத்தில் மக்களுக்கும் ஜனநாயகத்துக்கும் சுதந்திரத்துக்கும் அளவுக்கு அதிகமான இடம் அளிக்கப் பட்டுள்ளதோ என எண்ணத் தோன்றுகின்றதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

பிரான்ஸின் பாரிஸ் நகரில் ஐக்கிய தேசியக் கட்சிகிளை உறுப்பினர்களின் வருடாந்த கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தநாட்டில் திருடர்களுக்கு தண்டனை அளிக்கவும்,மோசமான பொருளாதாரத்தை கட்டியெழுப்பவும், இளைஞர் யுவதிகளின் எதிர்காலத்தை கட்டிஎழுப்பவும்,அபிவி ருத்தி கண்ட இலங்கையை உருவாக்கவும், சட்டத்தின் ஆட்சியை நிலைநாட்டவும் மக்கள் நல்லாட்சியை ஏற்படுத்தினர். ஆனால் இவை நிறைவேற்றப்பட்டுள்ளதா? என்ற கேள்வியும் இன்று மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.இது அரசாங்கத்தின் பிழை. ஐந்துஆண்டுகால திட்டமிடலின் அடிப்ப டையில் பணியாற்றுகின்றபோது நாம் கட் டம் கட்டமாக வெற்றிகண்ட விடயங்கள் பல உள்ளன.

இவை எதுவுமே சந்தைப்படுத்தப்ப டவில்லை. அல்லது மக்கள் மத்தியில் பிரபலப்படுத்தப்படவில்லை. இந்த கள்வர் கூட்டம் இன்னமும் உள்ளே தள்ளப்ப டவில்லையே என்பது தான் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பிரதானகேள்வி. முன்னர் கிரமப் புறங்களில் யாராவது திருடி அகப்பட்டால் அவர்களால் மக்கள் முன்னிலையில் வரமுடி யாது வெட்கப்பட்டு நிற்பார்கள். ஆனால் இன்று அப்படியல்ல. கள்வர்கள் எங்கள் மீது குற் றம் சாட்டிக் கொண்டு மக்கள் மத்தியில் வலம் வந்துகொண்டு இருக்கின்றனர்.எனவே தான் ஜனநாயகமும் சுதந்திரமும் அதிகரித்துவிட்டதோ என்று எனக்குள் ஓர் எண்ணம் தோன்றுகின்றது. இவை அதிகரித்ததால் தான் கள்வர்களுக் குவிரைவில் பிணையும் கிடைக்கின்றது. பெரும் திருடர்கள் எல்லாம் வீரர்கள் போல் வாழுகின்றனர்.நல்லவர்கள் எல்லாம் கள் வர்கள் போல் இருக்கின்றனர். அன்றாடம் வேலைநிறுத்தமும் ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறுகின்றன.எல்லோரையும் போல் ஊடகங்களும் அரசைவிமர்சிக்கின்றன. இந்த நாட்டு மக்களின் பணத்தை கொள் ளையடித்து இருந்தால் நிச்சயம் ஏதோ ஒருவிதத்தில் என்றாவதுஒருநாள் அவை அம்பலத்துக்கு வரும் என்பதே எனது நம்பிக்கையாகும். சிக்கல் மிகுந்த நூல்பந்தைப் போல் உள்ள இந்தப் பிரச்சி னைஒருநாள் வெளியேவரும். இயல்பான நீதியையும் தர்மத்தையும் நாம் நம்புகின் றோம்.எனவே இந்த சிக்கல் மிக்க நூல் பந்தின் ஒருமுனையாவதுசரியாகப் பிடிபட் டால் அடுத்த முனை வரை இதை அவிழ்த் துச் செல்லலாம் என்றநம்பிக்கைஉள்ளது. அப்போதுஎல்லாபிரச்சினைகளுக் கும் முடிவு கிட்டும். சட்டமாஅதிபர் திணைக்களத்தில் தூசி படிந்து காணப்படும் இந்தக் கோவைகள் விரைவில் வெளியே எடுக்கப்படும்.விஷேட நீதிமன்றம் ஒன்றை அமைத்தாவது இந்த விடயங்களுக்குதுரித தீர்வுகாணப்படும். அதற்குரிய அவசிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். அது தொடர்பாக விஷேட பிரேரணை பாராளு மன்றத்தில் கொண்டுவரப்படவேண்டும் என நான் நினைக்கின்றேன்.

நாம் உணர்ச்சிவசப்படாமல் விவேக பூர்வமாக சிந்தித்துப் பார்த்தால் நாம் அடைய வேண்டிய வெற்றியை அடைந் துள்ளோம் என்பதை புரிந்து கொள்ளலாம். அரசு இன்று கவிழும் நாளைகவிழும் என்று பொது எதிரணி தொடர்ந்து கூறிவருகின்றது. ஆனால் 2020 வரை ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேனவால் கூட இந்த அரசை அசைக்கமுடியாது என்பதுதான் யதார்த்தம். இது 19ஆவது திருத்தம் மூலம் ஏற்பட் டுள்ள நிலை. மக்களுக்கு நல்லதோர் வாழ்க்கையை எற்படுத்திக் கொடுக்கும் வாய்ப்பு எமக்கு கிடைத்துள்ளது. அதைநாம் மிகவும் பொறுப்புடன் முன்னெடுத்துவரு கின்றோம் என்றுமரிக்கார் கூறினார்.

# வவுனியா தமிழ் வித்தியாலயத்திற்கு மஸ்தான் எம்.பி விஜயம்



வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால யத்திற்கு நல்லெண்ண நோக்குடன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்த லைவருமான கே.காதர் மஸ்தான் நேற்று முன்தினம் திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டார். இந்த விஜயத்தின் போது பாடசாலை அதிபர்.கூ தர்மலிங்கத்தினால் மஸ்தான் எம்.பி வரவேற்கப்பட்டார்.

இதன்போது பாடசாலை அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் பாட சாலையின் அபிவிருத்தி தொடர்பாகவும் பாடசாலையின் அத்தியவசிய தேவைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. இதில் மைதானப் புனரமைப்பு, பாடசா லைத் தளபாடப்பற்றாக்குறை என்பனவற் றுடன் மழைக் காலங்களில் வவுனியா பிரதான பொலிஸ் நிலையம், வீடுகள் உட்பட மேட்டுப்பகுதியில் இருந்துவரும் மழை நீர் பாடசாலை வளாகத்தினூடாக சென்றடைவதினால் பாரிய அசௌகரியங் களை தாம் எதிர்கொள்வதாக அதிபர் தர்ம லிங்கம் தெரிவித்தார்.

இதனையடுத்து குறித்த சிக்கல் நிலைமை யினை தவிர்ப்பதற்கான நடவடிக்கைகளை தாம் முன்னெடுப்பதாக மஸ்தான்.எம்.பி தெரிவித்தார். குறித்த கலந்துரையாடலில் பாடசாலையின் ஆசிரியர்கள், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் பழைய மாண வர்களும் கலந்துகொண்டனர். அத்துடன் பாடசாலை வளாகத்தின் பிரச்சினைக்குரிய பகுதிகளை பார்வையிட்ட மஸ்தான் எம்.பி மிக விரைவில் தாம் மேலதிக நடவடிக்கை களை முன்னெடுப்பதாகவும் வாக்குறுதி யளித்தமை குறிப்பிடத்தக்கது.









கம்பஹா மாவட்ட ஐக்கிய முஸ்லிம் சங்கம் (உம்மா) மாபோலை அல் அஷ்ரப் மகா வித்தியாலயத்தின் 10,11 ஆம் ஆண்டு மாணவர்களுக்காக இலவச கணித, ஆங்கில வகுப்புக்களை நடாத்தி வருகின்றது. இதன் அங்குரார்ப்பண நிகழ்வில் முஸ்லிம் கவுன்ஸிலின் தலைவர் என்.எம். அமீன் பிரதம சொற்பொழிவாளராகக் கலந்துகொண்டார். நிகழ்வில் பாட சாலை ஆசிரியர் எஸ்.சிவக்குமார், சங்கத்தலைவர் எம்.டி.எம். முனாஸ் ஆகியோர் உரையாற்றுவதனையும் செயலாளர் ஏ.ஆர்.எம். முஸம்மில் உட்பட்ட மற்றும் பிரமுகர்கள் மேடையில் வீற்றிருப்பதையும் கலந்துகொண்ட பெற்றோர் மற்றும் மாணவர்களையும் படங்களில் காணலாம்.

# ஒலுவில் துறைமுக மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

## மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன்

(கோணாவத்தை நிருபர் றிபாஸ்)

ஒலுவில் துறைமுகத்தில் காணப்படும் மீனவர்களது பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காணும் பொருட்டு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமாகிய ரவூப் ஹக்கீமிடம் என்னால் விடுக்கப் பட்ட தொடர்ச்சியான வேண்டுகோளினை அடுத்து எதிர்வரும் சில தினங்களுக்குள் நிரந்தர தீர்வு காணப்படவுள்ளது என கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன் தெரிவித்தார்.

ஒலுவில் மீன்பிடி துறைமுகத்தில் மீனவர் களது படகுகளை செலுத்த முடியாமல் மண்மேடு காணப்படும் நிலைமையினை சீர் செய்யக் கோரி அம்பாறை மாவட்ட மீனவர் பேரவையினால் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டம் நடைபெறவிருந்த நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகளை ஒலுவில் துறைமுகத்திற்குச் சென்று மீனவர் களை நேரடியாகச் சந்தித்து கருத்துத் தெரி விக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கை யில்,

அன்றாட வாழ்வினை மேற்கொள்ளும் மீனவர்கள் அண்மைக் காலமாக படகுகள் பயணிக்கின்ற வழிகளில் ஏற்படுகின்ற மண் மேடு காரணமாக தொழிலினை மேற்கொள்ள முடியாமலும் தமது ஜீவன போவாய இயந்திரங்களை பாதுகாக்க முடி யாமலும் அல்லலுற்று வருகின்றனர்.

இது சம்மந்தமாக எமது கட்சியின் அர சியல்வாதிகள் பல முன்னெடுப்புக்களை மேற்கொள்கின்றபோதிலும், நிரந்தரத்தீர் வினப் பெற்றுக் கொள்ளாமைக்கு காலதா மதம் ஏற்படுவதினையிட்டு அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீனவர் சங்கத்தினர் பாரிய ஆர்ப்பட்டத்துக்காக மாவட்டம் தழுவிய ரீதியிலாக பகிரங்க அழைப்பினை துண்டுப்பிரசுரங்கள் மற்றும் தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்திருந்தனர்.

இதனையறிந்து தன்னால் ஆரம்ப காலம் முதல் இப்பிரச்சினை தொடர்பாக முன்னெடுக்கப்படுகின்ற தொடர்ச்சியான முன்னெடுப்புக்ளை நன்கறிந்த மீனவர்கள், இக்கண்டன பேரணியினை கைவிடக்கோரி யுள்ளேன். இது சம்பந்தமான நடவடிக்கை கள் பாராளுமன்ற அமைச்சரவையின் அனு மதியுடன் மேற்கொள்ளப்படவுள்ளாதகவும் ஒருவார காலத்துக்குள் இதற்கான இயந் திரம் தலைவரினூடாக வழங்கப்படுவதற்கு சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதா கவும் அதற்காக வழமைபோன்று மீனவர்க ளுள் ஒருத்தனாக கைகோர்த்து உழைப்பேன் என்ற உறுதி வழங்கியிருந்தேன்.

எனினும் மீனவர்கள் இது யாருக்கெதி ரானதுமன்று என்பதுடன் முற்றுமுழுதாக எங்களது இன்னல்களை வெளிக்காட்டுவ தேயாகும் என்று மீனவர்கள் தனது நியாய பூர்வமான கருத்துக்களை தெரிவித்தனர் என்றார்.



ரம்புக்கணை கே/மாவ/தாருல் உலூம் மகா வித்தியாலயத்தின் முதலாவது சாரணர்கள் குழு கடந்த திங்களன்று(13) சின்னம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். கேகாலை மாவட்ட சாரணர் ஆணையாளர் தீபால் குணவர்தன தலைமையில் நடை பெற்ற நிகழ்வில் சின்னம் அணிவிக்கப்பட்டதோடு, படத்தில் பாடசாலை அதிபர் எம். ஜஹாங்கீர், உதவியதிபர், அரனாயக்க அல்ஜெலால் பாடசாலை அதிபர் ஏ.கே. எம்.பைஸர், பாடசாலை சாரணர்கள் பொறுப்பாசிரியர் ஹபீபுன் நஜாத் மற்றும் சாரணர் களை காணலாம்.

# பெருந்தோட்ட சமூக காணி இயக்கத்தினால் ஆர்ப்பாட்டம்




(வத்துகாமம் நிருபர்)

பெருந்தோட்ட சமூக காணி உரிமைக் கான இயக்கம் பேராதனை கலகா சந்தியில் மாபெரும் ஆர்பாட்டம் ஒன்றை நேற்று மேற்கொண்டது.

கலஹா, தெல்தோட்டை, புபுரஸ்ஸ லிட்டில்வெலி போன்ற கண்டி தெற்கு பெருந்தோட்டங்ளைச் சேர்ந்த சுமார் 1500 தொழிலாளர்கள் இதில் கலந்து கொண்ட னர். கண்டி, கொழும்பு பிரதான பதையை கலஹா சந்தியில் மறித்து ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதால் இடைக்கிடை போக்குவரத்து தடைப்பட்டது. தமக்கு விவசாயத்திற்காக இரண்டு ஏக்கர் காணியும், வீடுகட்ட 20 பேச்சர்ஸ் காணியும் வேண்டுமென்றும் இன்னும் பல தொழிற் சங்கக் கோரிக்கை களையும் அவர்கள் முன்வைத்திருந்தனர். ஆர்ப்பாட்டத்தினால் ஏற்பட்டிருந்த போக் குவரத்து நெரிசலை தவிர்க்க பேராதனைப் பொலிஸார் ஒழுங்குகளை மேற்கொண்டி ருந்தனர்.

# 'தணிக்கைதகர்க்கும் தனிக்கை' நூல் வெளியீட்டுவிழா




'தணிக்கை தகர்க்கும் தனிக்கை' என்ற தலைப் பில், தமிழ் மிரர் பத்தி ரிகை ஆசிரியர் ஏ.பி.மதன் எழுதிய ஆசிரிய தலையங் கங்களின் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா நாளை பி.ப. 2 மணிக்கு கொழும்பு டி. ஆர் விஜ யவர்த்தன மாவத்தையில் அமைந்துள்ள தபால் தலை மையகக் கேட்போர் கூடத் தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும், சிறப்பு அதிதியாக எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அமைச்சர்களான ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், கயந்த கருணாதிலக ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்துகொள்ள வுள்ளனர்.

இந்நூல் வெளியீட்டு வைபவத்திற்கு காலைக் கதிர் ஆசிரியர் என்.வித் தியாகரன் தலைமை வகிப்பார். இணைத் தலைமையை இந்தியா வின் டெக்கோன் குரோ னிக்கல் பத்திரிகையின் நிறைவேற்று ஆசிரியர் திரு.பஹ்வான்சிங் ஏற்பார், நூல் ஆய்வினை சட்டத்த ரணி என்.கே. அஷோக்பரனும், வரவேற் புரையை ஊடகவியலாளர் பரணிதரன் முருகேசும் நிகழ்த்துவர். நூலின் முதற்பிரதியை எக்ஸ்பிரஸ் நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத் தின் முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன் பெற்றுக்கொள்வார்.

# அளுத்கமை பாடசாலையில் இரு மாணவர்களுக்கு எச்.ஐ.வி

(பேருவளை பி.எம்.முக்தார்)

அளுத்கமை பிரதேச பாடசாலையில் கல்வி பயிலும் இரு மாணவர்கள் மத்தியில் ஏச்.ஐ.வி தொற்று இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளதையடுத்து பாடசாலை மாணவர் கள், பெற்றோர்கள்,ஆசிரியர்கள் மத்தியில் பாலியல் நோய் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கருத்தரங்குகளை நடாத்த அளுத்கமை பொலிஸார் நடவடிக்கை களை எடுத்துள்ளனர்.

பாலியல் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ஷிரியானி சமரவீர சொற் பொழிவாற்றவுள்ளதுடன், இதனை அளுத் கமை பொலிஸ் நிலையபொலிஸ் பொது மக்கள் பிரிவினர் இதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

களுத்துறை பிரதிபொலிஸ் மா அதிபர் ஜி.கே.பெரேரா,பொலிஸ் அத்தியட்சகர் உபுல் நில்மினி ஆரியரத்ன உதவி பொலிஸ் அத்தியச் சகர் கபில பிரேமதாச ஆகியோரின் பணிப்பில் அளுத்கமை பொலிஸ் நிலையப் பொறுப்பதி காரி ஜய சம்பத் ரணசிங்க தலைமையிலான பொதுமக்கள், பொலிஸ் பிரிவினர் ஏற்பாடு களை செய்துவருகின்றனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் விடயத் தில் மிகவும் விழிப்புடன் செயற்பட வேண் டும். பிள்ளைகள் விடயத்தில் பெற்றோர்கள் அசமந்தமாக இருக்கும் போது இப்படியான பரிதாப நிலைக்கு ஆளாக்கப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். பாலியல் நோய் தொற்றுத் தொடர்பாக சுகாதார அமைச்சின் பங்களிப்புடன் செயலமர்வுகளை நடாத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# எழுத்தாளர் வஸீலாவுக்கு இந்தியாவில் விருது



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

இலங்கைப் பெண் எழுத்தாளர் வஸீலா சாஹிர் எழுதிய 'மொ ழியின் மரணம்' சிறுகதை நூலுக்கு உல கத் தமிழ்ப் பல்கலை கழகத்தினால் விருது கிடைக்கவுள்ளது.

அமெரிக்க உலக தமிழ்ப் பல்கலைக்க ழகம் ஏற்பாடு செய் துள்ள விருது வழங்கும் நிகழ்வின் போதே இந்த நூலுக்கும் விருது கிடைக்கவுள்ளது. அமெரிக்க உலக தமிழ்ப் பல்கலைக்கழகம் சிறந்த எழுத்தாளர்களின் நூல்களைத் தெரிவு செய்து விருதும் சான்றிதழும் வழங்கும் விழா எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை இந்தி யா சென்னையில் நடைபெறவுள்ளது.

சென்னை ரீ.ரீ. கே. சாலை, புது எண் 168, முதல் மாடியில் அமைந்துள்ள, மின்ஹால் மியூசிக் அகடமியில் இடம்பெறவுள்ள இந்நி கழ்வில், ஓய்வு பெற்ற தலைமை நீதிபதி என் வள்ளி நாயகம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

மினுவாங்கொடையைச் சேர்ந்த வஸீலா சாஹிர் எழுதிய நூலில் முஸ்லிம் பெண்களின் இல்லற வாழ்க்கையில் உள்ள சீரழிவுகள், அதனால் ஏற்படும் பாதிப்புகள் பற்றி எழு தியுள்ளார். குறுகிய காலத்தில் பல விருதுக ளுக்கு இவரது நூல் படைப்புகள் தெரிவு செய் யப்படுவது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# பேருவளையிலும் டெங்கு தீவிரம் ஒழிப்பு நடவடிக்கைகள் மும்முரம்





**பேருவளை பீ.எம். முக்தார்**

பேருவளை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் தீவிரமாக பரவி வரும் டெங்கு நோயை கட்டுப்படுத்த சுகாதாரப் பகுதியினர் தீவிர நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

சீனன்கோட்டை பகுதியே டெங்கினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசமாகும். இதுவரை மூவர் மரணமடைந்துள்ளதுடன் 100க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் ஊரில் உள்ள சமூகநல இயக்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், பாடசாலை மாணவர்கள், பரோபகாரிகளின் பங்களிப்புடன் டெங்குநோய் மேலும் பரவாது தடுக்க சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் அல்ஹாஜ் ராமிஸ் ஏ. கபூர் தலைமையிலான பள்ளிச்சங்க உறுப்பினர்கள், ஊர் மக்கள் இப்பணிக்கு பூரண பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

நேற்று 15ஆம் திகதி சீனன்கோட்டைப் பகுதியில் பாரிய டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. 130 சுகாதாரப் பகுதி ஊழியர்கள், வைத்தியர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் இதில் பங்குபற்றினர்.

சீனன்கோட்டை பகுதியில் டெங்கு நோயை முழுமையாக கட்டுப்படுத்தும் முயற்சிகளுக்கு இப்பகுதியைச் சேர்ந்த 400க்கு மேற்பட்ட இளைஞர்களும் சமூகநல இயக்கங்களின் உறுப்பினர்களும் அரசியல்வாதிகளும் இணைந்து கொண்டு வீடு வீடாகச் சென்று டெங்கு பரிசோதனை, புகை விசுறுதல், மக்களுக்கு விழிப்பூட்டும் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தனர். இந்த முயற்சி பெரு வெற்றியளித்ததாக பள்ளிச்சங்க தலைவர் ராமிஸ் ஏ. கபூர் கூறினார்.

டெங்கு நோயை கட்டுப்படுத்தும் வகையில் மூன்று புதிய புகை விசிறும் இயந்திரங்கள் பேருவளை சுகாதார வைத்திய பணிமனைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன.

பள்ளிச்சங்க தலைவர் ராமிஸ் ஏ. கபூர் மற்றும் மேல் மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல் ஆகியோர் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்னவிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து 6,15000 ரூபா பெறுமதியான மூன்று இயந்திரங்களும் சீனன் கோட்டை பள்ளிச்சங்க தலைவர் முன்னிலையில் சுகாதார வைத்திய அதிகாரியிடம் கையளிக்கப்பட்டன.

மாகாண சபை உறுப்பினர் இப்திகார் ஜெமீல், முன்னாள் உறுப்பினர் எம்.எம். எம். அம்ஜாத் உட்பட பலரும் நிகழ்வில் பங்குபற்றினர்.

சீனன்கோட்டை வாழ் மக்கள் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு வழங்கும் முழுமையான ஒத்துழைப்பு குறித்து சுகாதாரத்துறையினர் நன்றி கூறினர்.

சீனன்கோட்டைப் பாஸியா பள்ளிவாசலில் அவசர கூட்டமொன்றும் இடம் பெற்றதுடன் இதில் பல முடிவுகள் எடுக்கப்பட்டன.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க தலைவர் ராமிஸ் ஏ. கபூர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுகாதார அமைச்சின் சார்பில் டாக்டர் அமுனுகம, டாக்டர் எம். தெளபீக் உட்பட உயரதிகாரிகள், சீனன்கோட்டை பள்ளிச் சங்க பிரதித் தலைவர் எம்.எஸ்.எம். துகைன், உபதலைவர் எம்.எஸ்.எம். ரஸ்வி உறுப்பினர்களான ஹில்மி அபுல் காஸிம், ஹில்மி மௌஜுன் உட்பட சமூகநல இயக்கங்கள் விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் இதில் பங்குபற்றினர்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கு சீனன்கோட்டை பவுண்டேஷன் முழுமையான பங்களிப்பை செலுத்தியதாக அதன் உறுப்பினர் ஒருவர் கூறினார்.

820 பேருக்கு தமது அமைப்பு மூலம் இலவச இரத்த பரிசோதனை நடாத்தியதோடு புகை விசுறுவதற்கான மருந்து வகைகளையும் பெற்றுக் கொடுத்துள்ளது.

சீனன்கோட்டை பவுண்டேஷன் தலைவர் பஸால் மர்ஸுக் உட்பட உறுப்பினர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்துள்ளனர்.

சீனன்கோட்டையில் உள்ள ஏனைய பல சமூகநல அமைப்புகளும் பல்வேறு வழிகளிலும் டெங்கு ஒழிப்பு பணிக்கு தமது பங்களிப்பினை வழங்கி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

டெங்கு நோய் தீவிரமடைந்துள்ளதையடுத்து சீனன் கோட்டை பள்ளிச்சங்கத்தின் கீழ் உள்ள பள்ளிவாசல்கள் ஸாவியாக்களில் ஐவேளை தொழுகையிலும் குனூத் ஓதப்பட்டு வருவதுடன் துஆப் பிரார்த்தனையும் இடம்பெறுகிறது.

13ஆம் திகதி இப்பகுதி முஸ்லிம்கள் நோன்பும் நோற்றனர். நோன்பு நோற்றவர்களுக்கான இப்தார் நிகழ்ச்சி பெருகமலை தாக்கிரீன் பள்ளிவாசலில் இடம்பெற்றது. மௌலவி அப்துர் ரஹ்மான் ஹாபிஸ் துஆப் பிரார்த்தனை புரிந்தார். ஊர் ஜமாஅத்தினர் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

கட்டுக்குருந்தை இப்ராஹிமியா ஸாவியாவில் ஸலவாத் மஜ்லிஸும் துஆப் பிரார்த்தனையும் மௌலவி எம். அப்பாஸ் தலைமையில் இடம்பெற்றதுடன் புனித மக்காவிலிருந்து ஷாதுலிய்யாத் தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் நஜ்முல் உலமா அஷ்ஷெய்க் அஜ்வாத் அப்துல்லாஹ் அல் பாஸி அல் மக்கி அஷ்ஷாதுலி தொலைபேசியூடாக துஆப் பிரார்த்தனை நடத்தினார்.

சீனன்கோட்டை பகுதியில் டெங்கு நோய் ஏற்பட்ட பின்னர் சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் முக்கிய கவனம் செலுத்தி இதனை கட்டுப்படுத்த வேண்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் இணைந்து பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

ஆரம்பத்தில் காய்ச்சல் இருந்த 250 பேருக்கு டாக்டர் நூருல் இஸ்லாமின் சிகிச்சை நிலையத்தில் இலவச இரத்தப் பரிசோதனை முகாமொன்றை நடாத்தியது. அதன் போது பலருக்கு டெங்கு நோய் இருக்க கண்டு பிடிக்கப்பட்டது.

அமைச்சர் ராஜித சேனாரத்ன உட்பட பிரதேச அரசியல்வாதிகள் வழங்கும் முக்கிய பங்களிப்புக்கு சீனன்கோட்டை மக்கள் நன்றி கூறுகின்றனர்.

# உத்தர பிரதேசத் தேர்தல் முடிவுகளும் முஸ்லிம்களின் எதிர்காலமும்

**சாத்தான்குளம் அப்துல் ஜப்பார்**



ஒற்றை வரியில் சொல்வதாயின் ஹிந்தி - ஹிந்து - ஹிந்துஸ்தான் அதாவது ஒரு நாடு - ஒரே மொழி - ஒரே கலாசாரம் என்கிற இந்துத்வ சித்தாந்தம், முன் எப்போதும் இல்லாத அளவுக்கு முன்னெடுத்துச் செல்லப்படும் என்பதுதான்.

இந்தியாவின் மிகப்பெரிய மாநிலம் உத்தர் பிரதேஷ். உத்தரகண்ட் கூட சமீப காலம் வரை உ.பியின் ஓர் அங்கமாக இருந்து பிரிந்து சென்றதுதான். ஆக, இந்த இரு மாநில தேர்தல் முடிவுகள், ஹிந்தி பேசாத மாநிலங்களை விடுத்து, மற்றபடி இந்தியாவின் தீர்ப்பாகவே



கணக்கிடப்படுகிறது.

உ.பியில் 403 இடங்களில் பாஜகவுக்கு 325 இடங்கள் என்பது நான்கில் மூன்று பெரும்பான்மை. உத்தர் கண்டில் 70 இடங்களில் 57 என்பது மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை. பஞ்சாபில் 117 இடங்களில் 77 காங்கிரசுக்கு, பாஜவுக்கு 22, சீக்கிய அகாலி தளத்துக்கு 18. கோவாவில் 40-ல் 17 காங்கிரசுக்கு 13 பா.ஜ.வுக்கு ! மணிப்பூரிலும் இதே இழு பறி நிலை 60-ல் காங்கிரசுக்கு 28இபாஜக 21 இதரர் 11.

உ.பியிலும் உத்தர்கண்டிலும் பாஜக ஆட்சி இயல்பாக அமைந்து விடும். அது போல் பஞ்சாபில் காங்கிரஸ் ஆட்சியும் ! ஆனால் தமிழ் நாட்டில் அதிக இடங்களைப் பெற்ற கட்சித் தலைவரை ஆட்சி அமைக்கும் படி அழைக்க ஆளுநர் தயங்கினார். ஆனால் கோவாவில் குறைந்த இடங்களைப் பெற்ற பாஜக சார்பில் ஆட்சி அமைக்க அவசரமாக அழைக்கிறார். அதுபோலத்தான் மணிப்பூரிலும் ! அதிக இடங்களைப் பெற்ற காங்கிரசை ஆட்சி அமைக்க அழைக்காமல் இருக்கும் காங்கிரஸ் முதல்வரையும் கூட புதிய ஆட்சியை கொண்டு வருவதற்கேதுவாக பதவி விலக துணை ஆளுநர் நஜ்மா ஹெப்துல்லா நிர்ப்பந்தப்படுத்துகிறார்.

சொல்லப்படும் விநோதமான காரணம் காங்கிரசை விட ஏனைய கட்சிகள் அதிக இடங்களைப் பெற்றுள்ளன வாக்கு விகிதாசாரமும் அதிகம் என்பது தான் அந்த அளவுகோலின்படி உ.பி.யில் பாஜகவும் தான் சுமார் 40% வாக்குகளைப் பெற்றிருக்கிறது. அப்படியானால் 60% மக்கள் எதிரானவர்கள் என் பதை ஒப்புக்கொள்வார்களா ?

உ.பி.யில் முஸ்லிம்களின் வாக்கு விகிதாசாரம் சுமார் 17% ஆனால் பாஜகவில் முக்தார் அப்பாஸ் நக்வி போன்ற தலைவர்கள் அந்தக் கட்சியில் இருந்தும் கூட, ஒரு முஸ்லிமுக்குக் கூட போட்டியிட வாய்ப்பளிக்கவில்லை. ஆனால் பகுஜன் சமாஜ் கட்சியின் தலைவி மாயாவதி 97 முஸ்லிம்களுக்கு போட்டியிட வாய்ப்பளித்தார்.. அது தான் வினை. ! POLARISATION என்று சொல்வார்களே அது போல் நேர் வகிடு எடுத்த மாதிரி, இரண்டு சமூகங்களும் தனித்தனி அணிகளாக பிரிந்து நிற்க வழிவகுத்து விட்டது. முஸ்லிம்களுக்கு எதிரான பாஜகவினரின் துவேஷப் பிரசாரங்களையும் பெருக வைத்து விட்டது.

இந்தத் தேர்தல் வெற்றிகளைத் தொடர்ந்து, மார்ச் மாதம் 19-ம் தேதி முதல் மூன்று நாட்கள் அகில பாரதீய பிரதிநிதிகள் குழு என்கிற RSSன் உயர்அதிகார அமைப்பு கோவையை அடுத்துள்ள அம்ருதா பல்கலைக் கழகத்தில் கூடுகிறது. அத்துடன் சார்பு நிறுவனங்களான அகில பாரதீய வித்யார்த்திபரிஷத் (மாணவர் அமைப்பு) சேவா பாரதி, சம்ஸ்கிரித்த பாரதி (கலாச்சார அமைப்பு) வித்யா பாரதி (உயர் கல்வி அமைப்பு ) சிந்தா பைத்தக் (சிந்தனை தளம் ) பாரதீய மஸ்தூர் சங் (தொழிலாளர் அமைப்பு) ஆகியவைகளும் கலந்து கொள்கின்றன வருங்கால செயற்றிட்டங்கள் குறித்து இவர்களும் இவர்களது கருத்தைப் பிரதிபலிக்கும் யோசனைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

சர்ச்சைக்குரிய விஷயங்கள் தேசிய அளவில் விவாதிக்கப்படும் என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால், செய்யப்படுவதில்லை. முஸ்லிம் தனியார் சட்டத்துக்கு (Muslim Personal Law) விடை கொடுக்கப்படலாம். அனைத்திந்தியாவுக்கும் ஒரே உரிமையியல் சட்டம் (Common Civil Code) கொண்டு வரப்படலாம். கஷ்மீர் மாநிலத்துக்குள்ள சிறப்பு அந்தஸ்து வாபஸ் பெறப்படலாம்.

இந்த சிறப்பு அந்தஸ்தின் ஒரு முக்கிய அம்சம் கஷ்மீரில் அந்த மண்ணைச் சேர்ந்தவர்கள் தான் அங்கே சொத்துக்களை வாங்கவோ விற்கவோ முடியுமே தவிர, வந்தேறிகளால் அது முடியாது. எல்லாமக்களும் தேசிய நீரோடையில் கலக்க வேண்டும் என்பது பாஜகவின் கொள்கை.

ஆனால் தங்கள் இந்தியாவோடு இணைக்கப்பட்டபோது இந்த சிறப்பு அந்தஸ்து தங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் பிரதானமானது. இது வாபஸ் பெறப்பட்டால் கஷ்மீர் மக்கள் தங்கள் சொந்த மண்ணிலேயே சுதந்திர மற்றவர்களாக வாழ நேரிடலாம் என்பது அவர்களது வாதம். இது உள்நோக்கம் எதுவும் கொண்டதல்ல ஒட்டு மொத்த இந்தியாவும் ஒரே அளவு கோல்கொண்டு அளக்கப்பட வேண்டும் என்பது தான் எங்கள் நிலை என்கிறது பாஜக.

இந்த நாட்டில் எல்லா மக்களுக்கும் ஒரே சட்டம் என்பது இந்த நாட்டின் குடிமகன் என்கிற வகையில் ஏற்றுக் கொள்வதில் எந்த ஆட்சேபமும் இல்லை. ஆனால் சட்டத்துக்குட்பட்ட தனி நபர் சுதந்திரத்துக்கும் ஆச்சார அனுஷ்டானங்களுக்கும் எவ்வித இடையூறுகளும் இருக்காது என்பதை உறுதிப்படுத்த வேண்டியது ஒரு நல்லரசின் கடமை என்பதையும் ஒப்புக் கொள்ள வேண்டும் இல்லையா ?.

மாட்டை அறுப்பதற்குத் தடை அது இந்துக்களின் உணர்வுகளை மதிக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மாட்டிறைச்சியை மிக அதிகமாக ஏற்றுமதி செய்யும் நாடு என்கிற பொருளாதார அம்சத்தையும் லட்சக்கணக்கான ஏழைகளின் உணவு என்பதையும் விட்டு விடுவோம். ஆனால் குர்பானி என்கிற முஸ்லிம்களின் மத அனுஷ்டானத்துக்குக் குறுக்கே நிற்கிறதை அதை யாரிடம் போய் முறையிடுவது. ?

சட்டம் என்பதை மக்கள் தானாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பதை விட, மக்கள் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் இந்த அரசு நியாயமாகவும் நேர்மையாகவும் பாரபட்சமற்ற முறையிலும் ஆட்சி செலுத்தி மக்களை ஏற்றுக் கொள்ளச் செய்வதோடு. நான் ஓர் இந்தியன் இது என் நாடு எங்கள் அரசு என்று பெருமைப்படத்தக்க விதத்தில் அல்லவா நிலமைகள் இருக்க வேண்டும்.

இது கயிறு மேல் நடக்கும் வித்தை. ஒரு நாட்டின் பிரதமர் தன் சொந்த மத ஆச்சார அனுஷ்டானங்களை கடைப்பிடிப்பதை யாரும் தவறு என்று சொல்ல முடியாது. ஆனால் கோவை அருகே ஈஷா யோகா மையத்தின் சார்பாக ஒரு 112 அடி ஆதி யோகி சிலையை திறந்து வைத்தது கூட அவரது தார்மீகக் கடமை என்று சொல்லலாம்.

ஆனால் காட்டு யானைகள் நடக்கும் பாதையை குறுக்கே மறித்து ஏராளமான 109 ஏக்கர் விளை நிலங்களை ஆக்ரமித்து எவ்வித அனுமதியும் இல்லாமல் கட்டப்பட்ட ஒரு தனி நபர் முயற்சியை உற்சாகப் படுத்தும் விதத்தில் பிரதமர் அதை திறந்து வைக்கலாமா ? இதை எந்தக் குடிமகனோ அமைப்போ ஆட்சேபிக்க நினைத்தாலும் அதற்கு மதச் சாயம் பூசி திசை திருப்பும் அபாயம் இருக்கவே செய்கிறது அல்லவா ?

சமூகவியலை ஆய்வு செய்யக் கூடியவர்கள் இந்திய முஸ்லிம்களை நான்கு விதமாகப் பிரிக்கிறார்கள். Orthodox ( தீவிர மார்க்கப்பற்று உடையவர்கள், Secular (மத சார்பற்ற மனோநிலை கொண்டவர்கள்) Liberal ( எம்மதமும் சம்மதம் என்று எண்ணக்கூடியவர்கள் ) நான்காவதாக Terrorists (தீவிரவாதிகள்)

முஸ்லிம்களை வெறுப்பதையே தொழிலாகக் கொண்டவர்களும் முதல் பிரிவைப் பற்றி தங்களுக்கு கவலை இல்லை என்கிறார்கள். காரணம் அவர்கள் உலக ஆதாய விஷயங்களில் (Materialistic) அதிக அக்கறையோ ஆர்வமோ இல்லாதவர்கள்

இரண்டாவது மூன்றாவது பிரிவுகளை ஏனையோர் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று வரவேற்கிறார்கள். ஆனால் உண்மையான முஸ்லிம்கள் எனப்படுவோர் இவர்களைப் பார்த்து முகம் சுளிக்கிறார்கள். இவர்களது நடத்தையை ஜீரணிக்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள்.

நான்காவதைப் பொறுத்த வரை ''எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகள் அல்ல என்பவர்கள் ஆனால் எல்லா தீவிரவாதிகளும் முஸ்லிம்கள்தான் என்றோர் வாலையும் கோர்த்து விடுகிறார்கள்.

ஆக முஸ்லிம்கள் அரசிடம் எந்தப் பிரச்சினையாகட்டும் எப்படி நடந்து கொள்ளப் போகிறார்கள். அரசும் அதைச் சார்ந்த ஏனைய அமைப்புகளும் முஸ்லிம்களிடம் எப்படி நடந்து கொள்ளப் போகிறார்கள் - அவர்களை நடத்தப் போகிறார்கள் - என்பதைப் பொறுத்துத்தான் வரும் காலம் அமையும். அது நல்ல விதமாக அமைய வேண்டும் என்பது தான் நமது பிரார்த்தனை.



அமெரிக்காவை மிரட்டும் பனிப்புயல்:

# 7,600 விமான சேவைகள் ரத்து; 3 கோடி மக்களுக்குப் பாதிப்பு



அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியை பனிப்புயல் தாக்க தொடங்கியுள்ளது. இதன் காரணமாக 7,600 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. அரசு அலுவலகங்கள், பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் வடகிழக்குப் பகுதியான வொஷிங்டன் முதல் நியூ இங்கிலாந்து வரை பெரும் பனிப்புயல் தாக்கும் என்று அந்த நாட்டு வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதன்படி திங்கட்கிழமை நள்ளிரவு முதல் 60 கி.மீ. வேகத்தில் பனிப்புயல் வீசத் தொடங்கியது. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்றுமுன்தினம் முதல் 7,600 விமான சேவைகள் ரத்து செய்யப்பட்டுள்ளதுடன், ரயில், பஸ் சேவைகளும் ஸ்தம்பித்துள்ளன. அரசு அலுவலகங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான பாடசாலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்கல், வொஷிங்டனில் நேற்றுமுன்தினம் முதல்முறையாகச் சந்தித்துப் பேசவிருந்தார். ஆனால் பனிப்புயல் காரணமாக இரு தலைவர்களின் சந்திப்பு ரத்து செய்யப்பட்டது. நாளை (வெள்ளிக்கிழமை) இருவரும் சந்திப்பார்கள் என்று வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

### 3 கோடி மக்களுக்குப் பாதிப்பு

வொஷிங்டன், மாசச்சூசெட்ஸ், கனெக்டிகட், நியூஜெர்ஸி மாகாணங்கள் மற்றும் ஆன் லோங் தீவு உள்ளிட்டவை பனிப்புயலால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்த மாகாணங்களிலுள்ள வொஷிங்டன், நியூயோர்க், பாஸ்டன் உள்ளிட்ட நகரங்களின் மக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் என்று அந்தந்த நகர மேயர்கள் அறிவுறுத்தியுள்ளனர். ஒட்டு மொத்தமாக சுமார் 3 கோடிக்கும் மேற்பட்ட மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வீதிகள், சுரங்கப் பாதைகளில் பனிக்கட்டிகளை அகற்றும் வாகனங்கள் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. பனிப்புயல் வீசத் தொடங்கிய சில மணி நேரத்தில் 2 பேர் உயிரிழந்தனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

டிரம்ப் - சவூதி பட்டத்து இளவரசர் சந்திப்பு:



# பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவதாக அமெ. உறுதி

### சிரிய போரை முடிவுகட்டுவது குறித்தும் ஆராய்வு

சவூதியில் பொருளாதார மந்தநிலை தொடரும் தருணத்தில் அமெரிக்கா பயணம் மேற்கொண்டுள்ள சவூதி பட்டத்து இளவரசர் சல்மான் ஜனாதிபதி டிரம்ப்-ஐ சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

சர்வதேச சந்தையில் பெற்றோலின் விலை தொடர்ந்து கடும்சரிவைச் சந்தித்து வருவதால் எண்ணெய் வளத்தை மட்டுமே நம்பியுள்ள சவூதி உள்ளிட்ட வளைகுடா நாடுகள் சமீபகாலமாக பொருளாதார மந்தநிலையை சந்தித்து வருகிறது. பொருளாதார நெருக்கடியால் தள்ளாட்டம் போட்டுவரும் சவூதி அரேபியாவை சரிவிலிருந்து மீட்கும் அரசின் முக்கிய நடவடிக்கையாக சவூதி மன்னர் சல்மான் பின் அப்துல் அஜீஸ் தற்போது ஜப்பான், சீனா உள்ளிட்ட 7 ஆசிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து அந்நாட்டின் பொருளாதாரச் சரிவை சமநிலைப்படுத்த பேச்சு நடத்தி வருகிறார்.

மேலும், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப்பை சந்தித்து பொருளாதார நெருக்கடியிலிருந்து சவூதியை விடுவிப்பது தொடர்பாக பேச்சு நடத்த சவூதி பட்டத்து இளவரசர் முஹம்மது-பின் சல்மான் கடந்த 13ஆம் திகதி வொஷிங்டனுக்கு சென்றிருந்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், சவூதி பட்டத்து இளவரசர் முகம்மது பின் சல்மானை வெள்ளை மாளிகையில் நேற்றுமுன்தினம் சந்தித்து பேசினார். அப்போது அமெரிக்க தொழில் நிறுவனங்கள் சவூதியில் முதலீடு செய்வது குறித்து இரு தலைவர்களும் பேசினர். மேலும், சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டு போரை முடிவுக்கு கொண்டு வருவது குறித்தும் பேச்சுவார்த்தையின் போது ஆலோசிக்கப்பட்டது.

இரு தலைவர்களின் சந்திப்பு இருநாடுகளுக்கிடையேயான உறவில் பெரிய திருப்பு முனையாக இருக்கும் எனவும், சவூதியின் பொருளாதார வளர்ச்சிக்கு அமெரிக்கா தேவையான உதவிகள் செய்ய உறுதியளித்துள்ளதாகவும் சவூதி இளவரசருக்கான ஆலோசகர் தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தை முடிந்த பின்னர் இளவரசர் சல்மானுக்கு டிரம்ப் வெள்ளை மாளிகையில் விருந்தளித்தார். அமெரிக்க ஜனாதிபதியாக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்ற டிரம்ப் முதன் முறையாக சவூதி அரச குடும்பத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ராணி எலிசபெத் திருமண மோதிரத்தை சுழற்றினால் என்ன அர்த்தம் தெரியுமா?



உலகையே ஒருகுடை நிழலில் கட்டி ஆண்ட பிரித்தானிய அரச வம்சத்தின் மூத்த வாரிசாக விளங்கும் ராணி எலிசபத் குறித்த சில சுவாரஷ்ய தகவல்கள் கசிந்துள்ளன.

உலகத்தின் மிகப்பெரிய வி.ஐ.பி.யாக கருதப்படும் ராணி எலிசபத்துக்கு தற்போது 90 வயதாகிறது. பிரிட்டிஷ் அரச வம்சத்தின் மிக மூத்த வயதுடைய பட்டத்து ராணியாக இருக்கும் இவரை சந்திப்பதற்கு அவ்வளவு எளிதில் அனுமதி கிடைத்து விடுவதில்லை.

அப்படியே அனுமதி கிடைத்தாலும் பல்வேறு நிபந்தனைகள் அடங்கிய முழு நீள பட்டியல் சந்திக்க விரும்ப நினைக்கும் நபருக்கு எச்சரிக்கை மணியாக (ஒலிக்கப்படும்) அளிக்கப்படும். சில நிறங்களில் உடையணிவதை தவிர்க்க வேண்டும். சில நறுமணங்கள் கொண்ட பொருட்களை சந்திப்பின்போது பயன்படுத்தக் கூடாது என்று இந்த பட்டியல் நீண்டுகொண்டே போகும்.

ராணியின் அங்க அசைவுகள், சில நுணுக்கமான செய்கைகளின் (ஜாடை) மூலம் அவரது மனநிலை தொடர்பான சில ரகசியங்களும் மறைந்துள்ளன என்பது நம்மில் பலருக்கு தெரியாது. இதுதொடர்பாக, அவரது அரண்மனை வட்டாரங்களுக்கு மட்டுமே சில விபரங்கள் தெரியும். அவற்றில் ஒன்றிரண்டு தற்போது வெளியாகியுள்ளது.

ராணியிடம் கார் ஓட்டுநர் உரிமம் கிடையாது. அவர் எந்த நாட்டுக்கும் செல்ல பாஸ்போர்ட் பயன்படுத்துவதில்லை. ஒவ்வொரு விடயத்திலும் எந்தளவுக்கான கண்ணியமும், மரியாதையும் கடைபிடிக்கப்பட வேண்டும் என்பது அரண்மனையிலுள்ள அனைவருக்கும் அத்துப்படி. அரண்மனையில் வரலாற்று பதிவாளராக முன்னர் பணியாற்றிய ஹியூகோ விக்கர்ஸ் என்பவர் ராணியின் ஒருசில சங்கேத குறிப்புகளை பற்றி பத்திரிகை ஒன்றுக்கு செவ்வியளித்துள்ளார்.

தனது கைப்பையை மேஜை மீது வைத்தால் ராணி வெளியே புறப்பட தயாராகி விட்டார் என்று புரிந்து கொள்ளலாம். அதற்கேற்ப அவரது காரியதரிசிகளும் மெய்காப்பாளர்களும் அடுத்த ஐந்து நிமிடங்களுக்குள் புறப்பட தயாராகி விட வேண்டும்.

இடது கையில் இருக்கும் பையை வலது கைக்கும், வலது கையில் இருக்கும் பையை இடது கைக்கும் மாற்றுகிறார் என்றால் 'இந்த பேச்சை இத்தோடு நிறுத்திக்கொள்' என்று பொருள். பேசியபடியே விரலில் அணிந்திருக்கும் திருமண மோதிரத்தை திருகுகிறார் என்றால் 'முதலில் இந்த அறுவையை இங்கிருந்து வெளியேற்றுங்கள்' என்று மெய்க்காப்பாளர்களுக்கு உத்தரவிடுகிறார் என்று அர்த்தம்.

உடனடியாக, நமது தேவாலயத்தின் தலைமை மதகுரு (பிஷப்) உங்களை சந்திக்க விரும்புகிறார் என்று அந்த நபருக்கு 'அல்வா' கொடுத்து மெய்க்காப்பாளர்கள் வெளியே அழைத்து சென்று விடுவார்களாம். இதுபோன்ற மேலும் சில அரிய தகவல்களை அந்த பத்திரிகையில் ஹியூகோ விக்கர்ஸ் பதிவு செய்துள்ளார்.

# சோமாலியாவில் மழை வேண்டி பிரார்த்தனை



மழை பெய்ய பிரார்த்தனையில் பங்கேற்ற பிரதமர்....

சோமாலியா கடுமையான வறட்சி பேரழிவுக்கு உள்ளாக்கியிருக்கும் நிலையில், மழை பெய்ய இறைவனை வேண்டி நடத்தப்பட்டுள்ள தேசிய பிரார்த்தனையில் அந்நாட்டின் பிரதமர் அலி ஹசான் கெய்ரா பங்கேற்றுள்ளார்.

சோமாலிய வறட்சியை தேசிய பேரழிவாக அறிவித்து அந்நாட்டு ஜனாதிபதி மூகமது அப்துல்லாஹி பர்மாஜோ சர்வதேச உதவியை கோரியுள்ளார். இந்நிலையில் தலைநகர் மோகடிஷூவில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றும்போது, சோமாலிய மக்களிடமிருந்து வறட்சிச் சுமையை நீக்கிவிட வேண்டும் என்று கடவுளிடம் கேட்டு கொண்டுள்ளார்.

மேலும் சோமாலியா பஞ்சத்தின் விளிம்பில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரித்துள்ளது.

சோமாலியாவும், மேற்கு ஆபிரிக்க சாஹேல் பகுதி வரை பஞ்சத்தால் அல்லலுற்ற 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு பின்னர், ஆபிரிக்காவில் முதல் முறையாக தென் சூடானில் தற்போது பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

## உலகச் செய்திகள்

# பணியிடத்தில் பர்தாவுக்கு தடை விதிக்க வேண்டும்

### ஐரோப்பிய நீதிமன்றம் சர்ச்சை உத்தரவு



தொழில் புரியும் இடத்தில் பெண்கள் பர்தா அணிய தடைவிதிக்க வேண்டும் என ஐரோப்பிய நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளமை தற்போது சர்ச்சையை தோற்றுவித்துள்ளது.

பெல்ஜியத்தில் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் வரவேற்பாளராக பணிபுரிந்து வந்தவர் சமீரா. அந்த நிறுவனத்தில் 3 ஆண்டுகள் பணிபுரிந்து வந்த நிலையில், அவர் பர்தா அணிந்து பணிக்கு வந்துள்ளார். இதனையடுத்து அந்த நிறுவனத்திலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார். இதனை எதிர்த்து அந்நாட்டு நீதிமன்றத்தில் சமீரா வழக்கு தொடர்ந்தார்.

இதேபோன்று மற்றொரு சம்பவத்தில், பிரான்ஸ் தகவல் தொழில்நுட்ப (ஐடி) ஆலோசனை நிறுவனத்தில் டிசைனராக பணிபுரிந்து வந்தவர் அஸ்மா. அந்த நிறுவனத்தின் வாடிக்கையாளர் ஒருவர் அஸ்மா பர்தா அணிந்திருப்பது குறித்து நிறுவனத்திடம் முறைப்பாடளித்துள்ளார். இதனையடுத்து அந்த நிறுவனம் அஸ்மாவிடம் பர்தா அணிய வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளது. அவர் மறுக்கவே வேலையிலிருந்து அஸ்மாவை அந்நிறுவனம் நீக்கியுள்ளது.

இதனையடுத்து அஸ்மா நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். இவ்விரு வழக்குகளையும் விசாரிக்கும்படி, ஐரோப்பிய நீதிமன்றத்துக்கு பெல்ஜியம், பிரான்ஸ் நீதிமன்றங்கள் பரிந்துரை செய்தன.

இந்த வழக்கை விசாரித்த ஐரோப்பிய நீதிமன்றம் தற்போது தீர்ப்பளித்துள்ளது. அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அரசியல், மதம் ஆகியவற்றை வெளிப்படுத்தும் அடையாளங்களை அணிவதற்கு பணியாளர்களுக்கு நிறுவனங்கள் தடை விதிக்கலாம். நேரடியாக இனப்பாகுபாடு ஏற்படுத்துவதாக இதனை கருத முடியாது. அதேசமயம், நிறுவனத்தில் இதுபோன்ற தடைகொள்கை இல்லாதபட்சத்தில் வாடிக்கையாளர்கள் இதுபோன்று கோரிக்கை வைக்க முடியாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு அந்த நீதிமன்ற தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சசிகலா பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட விவகாரம்; 20 இற்குள் தேர்தல் ஆணையம் முடிவு



சசிகலா பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்ட விவகாரத்தில் திங்கட்கிழமைக்குள் முடிவு செய்யப்படும் என தேர்தல் ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது. மேலும் அ.தி.மு.க. விதிகளின் படி தேர்தல் ஆணையம் முடிவை 20ஆம் திகதிக்குள் அறிவிக்கவுள்ளது.

பொதுச்செயலாளர் நியமனம் தொடர்பாக இருதரப்பு கோரிக்கைகளை பரிசீலித்து வருவதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தமிழக முதலமைச்சராகவும், அ.தி.மு.க. பொது செயலாளராகவும் இருந்த ஜெயலலிதா கடந்த டிசம்பர் 5ஆம் திகதி காலமானார். இதைத் தொடர்ந்து அ.தி.மு.க. சசிகலா அணி, ஓ.பி.எஸ். அணி இரண்டாக உடைந்தது.

ஓ.பி.எஸ். அணிக்கு இதுவரை 12 எம்பிக்கள், 12 எம்எல்ஏக்கள் ஆதரவு தெரிவித்துள்ளனர். அ.தி.மு.க. தற்காலிக பொது செயலாளராக சசிகலா நியமிக்கப்பட்டது, செல்லாது என்று அறிவிக்க வேண்டும் என்று ஓ.பி.எஸ். அணியினர் இந்திய தேர்தல் ஆணையத்திடம் நேரில் மனு அளித்தனர். இதற்கு தேர்தல் ஆணையம் சசிகலாவிடம் விளக்கம் கேட்டது. இது தொடர்பாக, சசிகலா தரப்பில் 70 பக்க விளக்க கடிதம் கடந்த 10ஆம் திகதி தேர்தல் ஆணையத்திடம் வழங்கப்பட்டது.

சசிகலா தரப்பு விளக்க கடிதத்துக்கு மார்ச் 14ஆம் திகதிக்குள் பதில் கடிதம் தாக்கல் செய்ய வேண்டும் என்று ஓ.பி.எஸ். அணியினருக்கு தேர்தல் ஆணையம் உத்தரவிட்டது. அதைத் தொடர்ந்து ஓ.பி.எஸ். அணியினர் 61 பக்கம் விளக்க கடிதத்தை நேற்றுமுன்தினம் அளித்தனர். இந்நிலையில், நேற்று மீண்டும் ஓ.பி.எஸ். அணியினர் டில்லியில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் நஜீம் ஜைதியை சந்தித்து விளக்கமளித்தனர். இவ் விவகாரம் தொடர்பாக வரும் 16ஆம் திகதிக்குள் முடிவு செய்யப்படும் என்று தேர்தல் ஆணையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் மசோதாவுக்கு பிரித்தானிய பாராளுமன்றம் ஒப்புதல்



ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரிட்டன் வெளியேறும் மசோதாவுக்கு அந்நாட்டு பாராளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகித்த பிரித்தானியா கடந்த ஆண்டிலிருந்து வெளியேற பொதுமக்களிடம் வாக்கெடுப்பு நடத்தியது. கடந்த ஆண்டு ஜூன் 23ஆம் நடந்த பொதுவாக்கெடுப்பில் பெரும்பாலான பிரித்தானிய மக்கள் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேற ஆதரவு தெரிவித்திருந்தனர். இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து அப்போதைய பிரதமர் டேவிட் கெமரூன் பதவி விலகினார். தொடர்ந்து புதிய பிரதமராக தெரசா மே பதவியேற்றார்.

இந்நிலையில் பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து வெளியேறும் முன் மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்று ஏற்கனவே பிரபுக்கள் சபையில் நிறைவேற்றப்பட்ட சட்டதிருத்தங்களை நேற்றுமுன்தினம் கீழவை நிராகரித்தது.

இதனால் ஐரோப்பிய ஒன்றியம் தாக்கல் செய்த சட்டத் திருத்த மசோதாவில் எந்த திருத்தமுமின்றி கீழவையில் ஒப்புதல் வழங்கப்பட்டது. இதனால் மக்கள் விருப்பப்படி ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து பிரித்தானியா வெளியேறுவது உறுதியாகியுள்ளது. இந்த மசோதாவுக்கு ராணி எலிசபெத் ஒப்புதல் அளித்ததும் அது சட்டமாக்கப்படும்.

## பாகிஸ்தானில் ஆண்டுக்கு 1200 சிறுநீரகங்கள் விற்பனை



உலகளவில் தானமாக அளிக்கப்படும் சிறுநீரகங்களின் பற்றாக்குறை காரணமாக பாகிஸ்தானில் சட்டவிரோத சிறுநீரக வியாபாரம் அதிகரித்து வருகிறது.

பாகிஸ்தானில் மாதந்தோறும் சுமார் 100 சட்டவிரோத சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் நடப்பதாகவும் ஒரு நோயாளிக்கு 50 ஆயிரம் முதல் 60ஆயிரம் அமெரிக்க டொலர் வரை செலவாவதாகவும் பாகிஸ்தான் உடலுறுப்பு மாற்று சிகிச்சை மையம் தெரிவிக்கிறது.

ராவல்பிண்டி நகரில் நடந்துவந்த மிக மோசமான சிறுநீரகத்திருட்டை காவல்துறையினர் சென்ற ஆண்டு கண்டுபிடித்தனர்.

வேலை கொடுப்பதாக ஏமாற்றி அழைத்துச் செல்லப்பட்ட 25 பேர் அவர்களிடமிருந்து சிறுநீரகங்களை எடுக்கும் நோக்கில் பலவந்தமாக சிறைவைக்கப்பட்டிருந்த நிலையில் அண்மையில் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## டெங்கு நோயை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இதுவரை 13 பேர்கள் உயிரிழந்ததோடு 1500 க்கும் இதனால் கிண்ணியா வலயப் பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களயும் கணக்கெடுப்பு மேற்கொண்டபோது வரவில் வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. இதற்கு காரணம் டெங்கு தாக்கம் மற்றும் அச்சநிலையிலேயே காரணமாகும். இந்த மருந்தின் மூலம் 24 மணிநேரத்திற்குள் டெங்கு நோய் பாதிப்பேற்பட்டுள்ளதை அறியுமுடியும்.

ஜனாதிபதிமற்றும் அமைச்சர் ராஜித சேனாரத்னவுடன் இடம்பெற்ற இக் கூட்டத்திலே தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான கடிதத்தை கிண்ணியா வைத்தியசாலை அத்தியட்சகர் ஏ.எச்.எம். சமீம்,கிழக்கு மாகாண சபை முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ.மஜீத்தினால் இக்கடிதம் சுகதார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

# கிண்ணியாபாடசாலைகளுக்கு விசேட விடுமுறை

(கிண்ணியா சஹ்ரீன் எம் இஸ்மத்)

திருகோணமலை கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு காய்ச்சலினால் அதிகமானோர் பாடசாலைமாணவர்கள் பாதிக்கப்பட்டிருந்தமையில் நேற்று முதல் 15, 16, 17 வெள்ளிக்கிழமை வரை விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக கிண்ணியா வலயக் கல்விப்பணிப்பாளர் ஏ.எல்.அகமட் லெப்பை தெரிவித்தார்.

கிண்ணியா கல்வி வலயத்திற்குட்பட்ட66 பாடசாலைகளையும் மூன்று தினங்களுக்கு மூடும்படி அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கிண்ணியா பிரதேசத்தில் டெங்கு காய்ச்சலினால் இதுவரை 12 பேர்கள் உயிரிழந்ததோடு 1500 க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் கிண்ணியா வலயப் பாடசாலைகளில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களயும் கணக்கெடுப்பு மேற்கொண்டபோது வரவில்வீழ்ச்சி காணப்பட்டுள்ளது. இதற்கு காரணம் டெங்கு தாக்கம் மற்றும் அச்சநிலையிலேயே காரணமாகும்.

இது குறித்து கிண்ணியா பிரதேச அரசியல்வாதிகள் மற்றும் சமூக, சமய அமைப்புக்கள் பெற்றோர்களால் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க இது குறித்து கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் அசங்க அபேயவர்த்தன மற்றும்கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.நிசாம் ஆகியோர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டட பின்னரே இந்த விசேட விடுமுறை வழங்கப்பட்டது.

இந்த டெங்கு காய்ச்சல் தீவிரமடையுமானால் மேலும் இந்த விடுமுறையை நீடிப்பதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தி தருவதாகவும், இந்த விடுமுறைகளை எதிர்வரும் சனிக்கிழமைகளில் பதில் பாடசாலை நடாத்துவதற்கான ஒழுங்குகளும் மேற்கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்க உள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.அகமட் லெப்பை மேலும் தெரிவித்தார்.

## கடத்தப்பட்ட...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றிய கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, சோமாலியா கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட கப்பலிலுள்ள இலங்கை குழுவை மீட்க சோமாலியா அரசு படையினரை அனுப்பிவைத்துள்ளதோடு, குறித்த 8 பேரும் இலங்கையர்கள் என்பதும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இலங்கைக் கொடியுடன் எரிபொருள் ஏற்றிவந்த, கப்பல் ஒன்று சோமாலியா கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டுள்ளது. துபாய் அரசுக்குச் சொந்தமான எரிஸ் 13எனும் இந்தக் கப்பலில் எட்டுப் பேர் அடங்கிய குழு பயணித்ததாகவும் கூறப்பட்டது.

இதேவேளை, சோமாலியா கடற்கொள்ளையர்களால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தனது கணவரை மீட்டுத் தருமாறு அந்த கப்பலின் பிரதான அதிகாரியின் மனைவி கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

குறித்த கப்பலின் பிரதான அதிகாரியாக செயற்பட்ட மத்துகமவை சேர்ந்த கே.டீ.ப்ரேமனாத் என்பவரது மனைவியே இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

கே.டீ.ப்ரேமனாத்தின் உறவினர்கள் வெளிவிவகார அமைச்சிற்கு சென்று சம்பவம் தொடர்பில் தகவல்களை கேட்டறிந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## நுகர்வோர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நுகர்வோர் தினம் கொழும்பு தாமரைத் தடாக அரங்கில் நேற்று இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

நுகர்வோர் அதிகார சபை கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சு, நிதி அமைச்சு,மற்றும் சுகாதார அமைச்சு என்பன இலங்கையில் நுகர்வோர் தொடர்பில் பொறுப்பான பிரதான நிறுவனங்களாகும். அதே போல பெயர் குறிப்பிடாத நிறுவனங்களும் அமைச்சுக்களும் காணப்படுகின்றன.

நுகர்வோர் உரிமைகள் தொடர்பில் பேசும் போது கொள்வனவு செய்யும் பொருளின் குணம், மற்றும் தரம் முக்கியமானவையாகும். எனினும் எமது நாட்டை பொறுத்தவரையில் உணவு மற்றும் ஏனைய பொருட்களை அவதானித்தால் அவற்றை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்கள் எந்தளவு சரியாக செய்கிறார்கள் என கேள்வி காணப்படுகிறது. ஒரு நாட்டின் அபிவிருத்தி குறிக்காட்டியில் பிரதான ஒன்று உணவாக உட்கொள்ளும் உணவுகளின் சுத்தம், தரம், குணம் என்பனவாகும். சட்டத்தால் அல்லது உத்தரவு பிறப்பிப்பதால் அல்லது அரசியலமைப்பால் இந்த நிறுவனங்களை முகாமை செய்வதை விட நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்க இந்நிறுவனங்களிலுள்ள பிரதானிகள் தனது மனிதாபிமான பொறுப்பை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளனர்.

மனிதன் என்ற வகையில் மனிதராய் சிந்தித்து செயற்படுவது முக்கியமானதாகும். கொழும்பு நகரில் ஹோட்டல்களில் உணவு சமைக்கும் இடத்தை பார்த்தால் உணவு உட்கொள்ளவும் முடியாது. இதுதான் உண்மை நிலை. இந்நிலைமை இந்நாட்டில் மட்டுமல்ல. இதனால் தான் சர்வதேச நுகர்வோர் உரிமை தினம் கொண்டாடப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களின் போது நாம் அரசு என்ற வகையிலும் அமைச்சு என்ற வகையிலும் நிறுவன ரீதியாக செயற்படுத்தும் நடவடிக்கைகள் உண்டு. தற்போது புதிய தொழில் நுட்பத்துடன் நல்ல விடயங்கள் தாண்டி பிழையான விடயங்களே அதிகமாக இடம்பெறுகின்றன. இவை மனிதாபிமானமுள்ளவர்களால் இவை நடைபெறுகிறது.

இதனால் முழு மனித சமூகத்திற்கும் பாதிப்பேற்படுகிறது. எனவே தொழில்நுட்பத்துடன் தொடர்புபட்ட நுகர்வோர் வியாபாரி உற்பத்தியாளர்கள் நுகர்வோர் உரிமை தொடர்பான கரிசனையுடன் செயற்படுவது முக்கியம். நுகர்வோர் உரிமை தொடர்பாக அரசு என்ற வகையில் நாம் செயற்படுவதுடன் அனைத்து துறையினரின் ஆதரவையும் எதிர்பார்க்கின்றோம். என்றார்.

இந்நிகழ்வில் அதிதிகளாக கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் ரிஷாட் பதியுதீன், தொலைத்தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவும் கைத்தொழில் மற்றும் வணிக இராஜாங்க அமைச்சர் சம்பிக்க பிரேமதாச, பாவனையாளர் அதிகார சபையின் தலைவர் ஹஸித திலகரத்ன, அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் செயலாளர் சிந்திக் லொகுவட்டி, கன்சியுமர் இன்டர்நஷனல் அமைப்பின் பிரதிநிதி சத்தியசர்மா, களனி பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் வசந்தா குணசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

## மனித உரிமைகள்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசுக்குமிடையில் சிறந்ததொரு புரிந்துணர்வு காணப்பட்டாலும் அவர்களின் கருத்தை 100 வீதத்துக்கு ஏற்றுக் கொள்ள முடியாதென்றும் அவர் கூறினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற அமைச்சரவையின் வாராந்த முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டிருந்த இவரிடம், மனித உரிமை ஆணையகத்தின் அலுவலகத்தை அமைப்பது தொடர்பிலான அரசின் நடவடிக்கைகள் எவ்வாறு காணப்படுகின்றன? என்று கேள்வியொன்று எழுப்பப்பட்டபோதே மேற்கண்ட பதிலை அவர் வழங்கினார்.

இதுதொடர்பில் தெரிவித்த அவர், மனித உரிமை விவகாரம் தொடர்பில் அனைத்து விதத்திலும் சேவையாற்ற அரசு தயாராகவே இருக்கின்றது. எனினும், அவ்வாறான அலுவலகமொன்று அமைப்பது தொடர்பில் அரசு சிந்திக்கவே இல்லை. இதுபோன்ற செயற்பாடுகளின் சர்வதேசத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளும் நிலைப்பாட்டில் அரசு இருந்தாலும், மனித உரிமை அலுவலகம் குறித்தெல்லாம் அரசு இதுவரை எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கவே இல்லை என்றார்.

## இலங்கை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அனீஸ் ரவுப் தலைமையிலான இந்த சர்வதேச அமைப்பினர் இலங்கையில் சட்டத்தின் ஆட்சி, நீதி வழங்குதலில் நிலவும் தாமதம், வடக்கு முஸ்லிம்களின் மீள்குடியேற்றம், மீள்குடியேற்றத்தில் உள்ள தாமதம், புறக்கணிப்பு, யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனச்சுத்திகரிப்பு அவலங்களை சுமந்துநிற்கும் அந்த சமூகத்தினருக்கு அகதிகளுக்கான அந்தஸ்து இதுவரை கிடைக்காமை, யாழ்ப்பாண முஸ்லிம் விவகாரத்தில் வடமாகாண சபையின் இழுத்தடிப்பு, பௌத்த சிங்கள இனவாதிகளின் வெறுப்புப் பேச்சு, அதற்கெதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படாமை, அளுத்கம விவகாரத்தில் முஸ்லிம்களுக்கு நீதி மறுக்கப்பட்டமை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களை றீட்டா ஐசக்கின் கவனத்திற்கு கொண்டுவந்தனர்.

இவற்றை கவனமாக செவிமடுத்து, குறிப்பெடுத்துக்கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அகதிகள் விவகார பிரதிநிதி றீட்டா ஐசக் இலங்கை முஸ்லிம்கள் குறித்து தனது பிந்திய அறிக்கையை ஞாபகமூட்டியதுடன், இலங்கைக்கான தனது பயணத்தின் போது இலங்கை முஸ்லிம்களின் நிலைகண்டு தாம் அதிர்ச்சியடைந்ததாக குறிப்பிட்டார்.

அத்துடன் தாம் எதிர்வரும் காலங்களில் இலங்கை முஸ்லிம்கள் பற்றி தொடர்ந்து குரல் கொடுப்பதாகவும், தமது பரிந்துரைகளை இலங்கை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டுமென அழுத்தம் கொடுக்கவுள்ளதாகவும், அதனை மேற்பார்வை செய்யவுள்ளதாகவும் திட்டவட்டமாக தெரிவித்தார்.

மேலும் இலங்கை முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடுகளை தாம் அவதானிப்பதாகவும், அளுத்கம விவகாரத்தில் நீதி மறுக்கப்பட்டமையை தாம் உணர்வதாகவும் றீட்டா ஐசக் ஒப்புக்கொண்டார்.

சுமார் 40 நிமிடங்கள் நீடித்த றீட்டா ஐசக் மற்றும் சர்வதேச யாழ்ப்பாண முஸ்லிம் சமூகத்திற்கிடையிலான பேச்சின் இறுதியில், பேசப்பட்ட விவகாரங்கள் ஆவண வடிவிலும், யாழ்ப்பாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் வீடமைப்பு உள்ளிட்டவைகள் அடங்கிய விடயங்கள் அறிக்கை வடிவிலும் அவரிடம் கையளிக்கப்பட்டன.

அன்சாரினால் ஆவணங்கள் கையளிக்கப்டும் படமும் முதற் பக்கத்தில் உள்ளது.

## விட்டுக்கொடுப்புகளை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்தார்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் விவாக, விவாகரத்து தொடர்பான விதிமுறைகளில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பாக அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா பிரதிநிதிகள், நேற்றிரவு (14) ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை சந்தித்து கலந்துரையாடும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு அமைச்சர் மேலும் கூறுகையில்,

முஸ்லிம் தனியார் சட்டத்தில் சர்ச்சைகளாக இருக்கின்ற பிரச்சினைகளுக்கு அப்பால், தீர்க்கக்கூடிய பிரச்சினைகளுக்கு முதலில் இனம்கண்டு அவற்றைத் தீர்க்கவேண்டும். அதேவேளை, முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் முன்வைக்கப்படும் பிரச்சினைகளை எவ்வாறு தீர்வுகாண்பது என்பது தொடர்பில் முதலில் கவனம் செலுத்தவேண்டும். வறுமை காரணமாகவே அதிகளவில் இளவயது திருமணங்கள் நடக்கின்றன. அதனை நிவர்த்திக்கும் வழிமுறைகளை தேடவேண்டும் என்று குறிப்பிட்டார்.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், அதற்கு அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவும் இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால், அந்த திருத்தங்கள் ஷரீஆ சட்டத்துக்கு முரண்படாத வகையில் இருந்தால் மாத்திரமே, அதற்கு அனுமதியளிப்பது என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாக உலமா சபை இதன்போது சுட்டிக்காட்டியது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் கட்டாயம் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென சில மகளிர் அமைப்புகள் சார்பிலும், சில பெண்ணியல் செயற்பாட்டாளர்கள் சார்பிலும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு பதிலளிக்கும் வகையிலும், உலமா சபை மேற்கொள்ள தீர்மானித்திருக்கும் விடயங்களை தெளிவுபடுத்தும் வகையிலும் தயாரிக்கப்பட்டுள்ள ஆவணமொன்று அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் உலமா சபையினால் கையளிக்கப்பட்டது.

முஸ்லிம் தனியார் சட்டத்தில் உலமா சபை மேற்கொள்ளவுள்ள திருத்தங்களை அரசியல்வாதிகள் மூலம் அரசாங்கத்துடன் பேசுவதற்கும், மக்கள் மத்தியில் கொண்டுசெல்வதற்கும் தீர்மானித்துள்ளதாக உலமாசபை பிரதிநிதிகள் தெரிவித்தனர். இந்த திருத்தம் தொடர்பாக தமது நிலைப்பாட்டை பாராளுமன்றத்தில் பேசுமாறு அமைச்சர் ரவூப் ஹக்கீமிடம் உலமா சபை கோரிக்கை விடுத்தது.

திருமண வயதெல்லையில் கட்டுப்பாடு, பெண் காதிகளை நியமித்தல், பெண் பதிவாளர்களை நியமித்தல், 'வலி' இல்லாமல் பெண்ணின் விருப்பத்துடன் திருமணம், பலதார திருமண கட்டுப்பாடு போன்றவற்றை தனியார் சட்டத்தில் திருத்துமாறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

திருமண வயதெல்லை என்ற விடயத்தில், பருவமடைந்ததும் திருமணம் செய்துகொள்ள இஸ்லாம் அனுமதித்துள்ளது. 18 வயதுக்குட்பட்டவர்கள் திருமணம் முடிப்பதற்கு தடை என்று நிபந்தனை விதிக்காமல், 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் திருமணம் முடிக்கலாம் என்று சிபார்சு செய்யப்பட்டது. இதேவேளை, பராமரிப்பதற்கு ஆளில்லாதவர்கள், சொத்துகளை கையாள்வதற்கு உரிய வயதை அடையாதவர்கள் என்று 18 வயதுக்குட்பட்டவர்கள் திருமணம் முடிப்பதை தடைசெய்ய முடியாது என்றும் வலியுறுத்தப்பட்டது.

2011 - 2016 வரையான காலப்பகுதியில் 14,737 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 5 சதவீதமானோர் மாத்திரமே 17 வயதுக்குட்பட்ட வயதில் திருமணம் முடித்துள்ளனர். வடக்கிலிருந்து புத்தளத்தில் இடம்பெயர்ந்து வாழ்வோர் அதிகளவில் இருப்பதினாலும், வறுமை காரணமாகவுமே அப்பகுதியில் அதிகளவில் இளவயது திருமணங்கள் நடப்பதாக சுட்டிக்காட்டப்பட்டன. அதேவேளை, இலங்கையில் ஒரு நாளைக்கு 16 வயதுக்கு குறைந்த 6 பேர் சராசரியாக பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்படுவதாக புள்ளிவிபரங்கள் கூறுகின்றன.

அத்துடன், பெண்கள் தரப்பு பிரச்சினைகளை முன்வைப்பதற்காக காதி நீதிபதிகளுக்கு துணையாக பெண்களை நியமித்தல், பள்ளிவாசல்களை அண்டியவாறு திருமணம் சம்பந்தமான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஒரு மத்திய நிலையத்தை ஸ்தாபித்தல், தலாக் சொல்லப்பட்ட பெண்களுக்கான வாழ்வாதாரங்களை ஏற்படுத்திக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், திருமண பதிவாளர்களுக்கான விழிப்புணர்வூட்டல் போன்ற பல கோரிக்கைகள் உலமா சபையினால் முன்வைக்கப்பட்டன.

மகளிர் தொடர்பான விவகாரங்களை கையாள்வதற்காக ஜம்இய்யத்துல் உலமாவில் விசேட பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

இவற்றின்மூலம் விவாகம் மற்றும் விவாகரத்தினால் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்மூலம் பிரிந்துபோகவிருந்த பெண்கள் பலர் அவர்களது கணவன்மாருடன் சேர்த்து வைக்கப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டது. இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான அமைச்சர் ரவூப் ஹக்கீம், மு.கா. பிரதி செயலாளர் நாயகம் சட்டத்தரணி நிஸாம் காரியப்பர், கட்சியின் வெளிநாட்டு விவகார பணிப்பாளர் சட்டத்தரணி ஏ.எம். பாயிஸ் ஆகியோரும் ஜம்மிய்யத்துல் உலமா சார்பில் பொதுச் செயலாளர் மௌலவி எம்.எம்.ஏ. முபாறக், பொருளாளர் மௌலவி ஏ.எல். எம். கலீல், உதவி பொதுச் செயலாளர்களான மௌலவி எம்.எஸ்.எம். தாஸீம், மௌலவி முர்ஷித், நிறைவேற்றுக்குழு உறுப்பினர்களான மௌலவி எஸ்.எல். நௌபர், மௌலவி முஹம்மட் பவாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## காத்தான்குடியில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கிழமையன்று இரண்டு குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதல் சம்பவத்தையடுத்து அது தொடர்பாக ஆராயும் விஷேட மாநாடு ஒன்று புதன்கிழமை (15) காத்தான்குடி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முசம்மில் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.பி.வெதகெதர மற்றும் காத்தான்குடி நகர சபை செயலாளர் எஸ்.எம். ஸபி மற்றும் உதவி பிரதேச செயலாளர் ஏ.சி.அகமட் அப்கர் மற்றும் காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை பிரதிநிதிகள், காத்தான்குடி பள்ளிவாயல்களின் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளன பிரதி நிதிகள், காத்தான்குடி வர்த்தக சங்க பிரதி நிதிகள், கிராம உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது காததான்குடியில் கடந்த வெள்ளிக்கிழமையன்று இரண்டு குழுக்களுக்கிடையில் நடைபெற்ற மோதல் சம்பவம் தொடர்பாக ஆராயப்பட்டன. இந்த மாநாட்டின் இறுதியில் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதில் காத்தான்குடியில் அமைதிக்கும் சமாதானத்திற்கும் குந்தகம் ஏற்படுத்தும் வகையில் காத்தான்குடி பிரதேசததில் பொது இடங்களில் மற்றும் வீதியோரங்களில் மாக்கப்பிரசாரக் கூட்டங்களை நடத்துவதற்கு தடை விதிப்பதெனவும் மற்றும் அதான் சொல்லுதல், பொது அறிவித்தல்கள் வாசித்தல், இரு பெருநாட்கள் ஆகியவைகள் தவிர்ந்த ஏனைய அனைத்து விடயங்கள் மற்றும் வைபங்களின் போதும் வெளி ஒலி பெருக்கி பாவிப்பதை முற்றாக தடை செய்தல் என இதன் போது ஏக மனதாக தீர்மாணம் நிறைவேற்றப்பட்டன.

கடந்த வெள்ளிக்கிழமை காத்தான்குடியில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் காத்தான்குடியிலுள்ள இரண்டு சிறிய குழுக்களே சம்பந்தப்பட்டுள்ளன. இந்த இரண்டு சிறிய குழுக்களின் மோதல் சம்பவத்தினால் காத்தான்குடியை வெளி பிரதேசங்களிலும் மற்றும் சர்வதேச ரீதியாகவும் கேவலப்படுத்துவதற்கு சிலர் முயற்சி செய்கின்றனர்.

இந்த சம்பவங்களுக்கு காத்தான்குடி மக்களுக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது எனவும் இதில் காத்தான்குடியையும் காத்தான்குடியிலுள்ள பெரும்பான்மையான மக்களையும் கேவலப்படுத்தி காட்ட வேண்டாமெனவும் இதில் கலந்து கொண்ட பிரமுகர்களினால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

## கலப்பு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஒருபோதும் அனுமதியில்லை என்று அரசு நேற்று மீண்டும் உறுதிபட தமது நிலைப்பாட்டை அறிவித்தது.

ஜி.எஸ்.பி. வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்ளவேண்டுமெனில் 2015 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தால் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி 2015 ஆம் ஆண்டில் மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட இந்த இலங்கைத் தொடர்பிலான தீர்மானத்தில் கலப்பு நீதிமன்றக் கட்டமைப்பு குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிலையிலேயே அரசு மேற்பத் தமது நிலைப்பாட்டினை தெரிவித்தது.

அதேநேரம், ஐ.நா. தீர்மானத்துக்கும் ஜி.எஸ்.பி வரிச்சலுகைக்கும் சம்பந்தமில்லை என்றும் அரசு சுட்டிக் காட்டியது.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று பிற்பகல் அரச தகவல் திணைக் களத்தில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டிருந்த பிரதியமைச்சர் அஜித் பி பெரேராவிடம் மேற்படி விடயம் தொடர்பில் வினா எழுப்பப்பட்டபோதே இவ்வாறு பதிலளிக்கப்பட்டது.

அதாவது, மனித உரிமை விவகாரத்தில் இலங்கை அரசின் நிலைப்பாட்டையும் இதுதொடர்பிலான செயற்பாட்டையும் சர்வதேசம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. நாமும் அதற்கேற்றவகையில் எமது நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துத் தான் வருகிறோம். சர்வதேசமும் எமக்கு அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்கும் என்றே நம்புகிறோம்.

மேலும், மனித உரிமை விவகாரம் தொடர்பில் கலப்பு நீதிமன்றத்தையோ சர்வதேச நீதிபதிகளையோ ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்ற நிலைப்பாட்டில் தான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட ஒட்டுமொத்த அரசும் இருக்கின்றது.

எமது நீதிமன்றக் கட்டமைப்பு மிகவும் சுயாதீனமாகவும் பலமாகவும் இருக்கும்போது கலப்பு நீதிமன்றமொன்று நாட்டுக்கு அவசியமில்லை. நாம் தேசிய சட்டக்கட்டமைப்பில் முழுமையாக நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே, சர்வதேசமோ அல்லது இதற பிரிவினைவாதக் கூட்டங்களோ என யார் எமக்கு அழுத்தங்களை விடுத்தாலும் நாம் ஒருபோதும் கலப்பு நீதிமன்றத்தை மட்டும் நாட்டுக்குள் அனுமதிக்கவே மாட்டோம். இதுதான் அரசின் நிலைப்பாடு என்று பிரதியமைச்சர் அஜித் தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நடவடிக்கைக்குழுவொன்று கொழும்பில் நடத்திய இணைக்கூட்டத்துக்குப் பின்னர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே ஜி.எஸ்.பி. ப்ளஸ் வரிச்சலுகையை பெற்றுக்கொள்ள வேண்டுமெனில் 2015 தீர்மானத்துக்கு அரசு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## கிண்ணியாவில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தேங்கி நிற்கும் அழுக்குத் தண்ணீரிலே இந்த நுளம்புக் குதம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முழுக் கிண்ணியாவுக்கும் டெங்கினை பரப்பக் கூடிய நுளம்புகள் இந்த குதத்திலிருக்கும் என நேரில் கண்ட தொண்டர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கம் அறிவித்தபடி அரசின் முழு இயந்திரமும் நேற்று முதல் கிண்ணியாவில் களமிறங்கி சுத்திகரிப்பு உட்பட மற்றும் பணிகளிலீடுபட்டார்கள்.

நேற்று கிண்ணியாவுக்கு அடிக்கடி பெய்த மழை சுத்திகரிப்பு வேலைகளுக்கு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியது.

இதேநேரம் நேற்று வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் குறிப்பிட்ட எண்ணிக்கையினர் சிகிச்சை பெற்ற அதே வேளை மூன்று பேரே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என கிண்ணியா வைத்தியசாலை அத்தியட்சகர் டாக்டர் ஏ.எச்.எம். சமீம் தெரிவித்தார். நேற்றாகும் போது வைத்தியசாலையிலே 113 பேர் சிகிச்சை பெற்று வருவதாகவும், நேற்றுவரை மொத்தமாக 1000 பேர் வரை டெங்குக்காக சிகிச்சை பெற்றுள்ளதாகவும் டாக்டர் சமீம் தெரிவித்தார். கிழக்கு முதலமைச்சர் நஸீர் அஹமதின் பணிப்பின் நேற்று கிண்ணியாவுக்கு அதிகாரிகள் சகிதம் விஜயம் செய்த மாகாண சுகாதார அமைச்சர் முஹம்மத் நஸீர் உடனுக்குடன் பணிப்புரைகளை வழங்கி நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தார்.






**இலங்கை - பங்களாதேஷ் டெஸ்ட் கிரிக்கெட் தொடர்:**

# 100ஆவது டெஸ்ட்டில் வங்கம் அபாரம் துடுப்பாட்டத்தில் தடுமாறுகிறது இலங்கை









பீ.எப்.எம் றிஷாட்

இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான வரலாற்று டெஸ்ட் போட்டி நேற்று கொழும்பு பி.சரவணமுத்து மைதானத்தில் ஆரம்பமாகியது.டெஸ்ட் கிரிக்கெட் உலகில் 100 ஆவது டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி நேற்று விளையாடியது. பங்களா தேஷ் அணியின் 100ஆவது டெஸ்ட் போட்டியை சிறப்பிக்கும் வகையில் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் விசேட வைபவமொன்று நேற்று காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில் விளையாட்டுத் துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர, இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் திலங்க சுமதிபால, பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைவர் நஜ்முல் ஹுசைன் உள்ளிட்ட கிரிக்கெட் அதிகாரிகள் கலந்துகொண்டனர். அத்துடன், பங்களாதேஷ் வீரர்களுக்கு சிறப்பு பதக்கமொன்றும் இதன்போது வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன்படி. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

போட்டியின் மதிய நேர இடைவேளை வரை சிறப்பான பந்துவீச்சை மேற்கொண்ட அவ்வணி புதிய சாதனையுடன் 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியது. இதில் பங்களாதேஷ் அணி வீசிய முதல் 3 ஓவர்களிலும் எந்தவொரு ஓட்டங்களையும் இலங்கை அணி வீரர்கள் பெற்றுக்கொள்ளவில்லை. இதன்படி, சுமார் 17 வருட டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் பங்களாதேஷ் அணி முதற்தடவையாக முதல் 3 ஓவர்களில் ஓட்டம் எதனையும் கொடுக்காமல் புதிய சாதனை படைத்தது.எனினும், இலங்கை அணியின் முதல் 4 துடுப்பாட்ட வீரர்களும் குறைந்த ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க, இலங்கை அணி நெருக்கடிக்கு முகங்கொடுத்தது. இதில் திமுத் கருணாரத்ன(7), குசல் மெண்டிஸ்(5), உபுல் தரங்க(11), அசேல குணரத்ன(13) ஓட்டங்களையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.இதன்படி நேற்றைய மதிய நேர இடைவெளியின் போது இலங்கை அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

எனினும், 5ஆவது விக்கெட்டுக்காக சந்திமாலுடன் இணைந்து தனஞ்சய டி சில்வா சிறப்பான இணைப்பாட்டத்தை மேற்கொண்டார். இதில் நிதானமாக விளையாடிய இலங்கை அணியின் உபதலைவர் தினேஷ் சந்திமால் அரைச்சதம் கடந்து 86 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். நேற்றைய நாள் நிறைவடையும் போது இலங்கை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 238 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.பந்துவீச்சில் மெஹன்தி ஹசன் மீராஸ் 2 விக்கெட்டுக்களையும், முஷ்தபிசூர் ரஹ்மான் மற்றும் சுபாஷிஸ் ரோ ராய் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர். இன்று போட்டியின் 2ஆவது நாளாகும்.

**16 வயதிற்குட்பட்ட தெற்காசிய கால்பந்தாட்டம்:**

# இலங்கை – நேபாள போட்டி சீரற்ற காலநிலையால் கைவிடல்

பீ.எப்.எம் றிஷாட்

தெற்காசிய மற்றும் ஜப்பான் நாடுகளின் 16 வயதின் கீழ்ப்பட்டவர்களுக்கான கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியாக இடம்பெற்ற இலங்கை மற்றும் நேபாள அணிகளுக்கு இடையிலான போட்டி அடை மழையின் காரணமாக இரு அணிகளும் எந்தவித கோல்களையும் பெற்றிராத நிலையில் நிறுத்தப்பட்டது.

போட்டி ஆரம்பமானது முதல் இரு தரப்பும் ஓரளவு சமநிலையில் ஆடிக்கொண்டிருந்த நிலையில், அதனிடையே இலங்கை வீரர்களுக்கான சிறந்த ஒரு கோல் வாய்ப்பு தவறவிடப்பட்டது.அதன் பின்னர் மழை பெய்ய ஆரம்பித்தமையினால் போட்டி மேலும் விறுவிறுப்படைந்தது. இரு அணியினரும் மழையையும் பொருட்படுத்தாது வேகமாக விளையாட ஆரம்பித்தனர்.இலங்கையின் வேகமான வீரர் முர்ஷித் பந்தை தனியே நீண்ட தூரம் எடுத்து வந்து உள்ளனுப்ப, அங்கே இருந்த சபீர் மூலம் கோலுக்கான அழகான முயற்சி சிறந்த முறையில் நிறைவு செய்யப்படவில்லை.அதனைத் தொடர்ந்து மீண்டும் ஒருமுறை முர்ஷித் வேகமாகப் பந்தை முன்கொண்டு செல்லுகையில், நேபால் கோல் காப்பாளர் தனது எல்லையில் இருந்து பந்தைத் தடுப்பதற்கு வெளியே ஓடி வந்தார். எனினும், இந்த சந்தர்ப்பத்தைப் பார்த்து வேகமாக கோலை நோக்கி முர்ஷித் பந்தை உதைய பந்து கம்பங்களில் பட்டு வெளியே வந்தது.தொடர்ந்தும் அடை மழை பெய்தமையினால் போட்டி நடுவர் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தார். பின்னரும் மழை தொடர்ந்தமையினால் ஆட்டம் 37 நிமிடங்கள் நிறைவுற்ற நிலையில் நிறுத்தப்பட்டது.

அதற்கு முன்னர் இடம்பெற்ற ஜப்பான் மற்றும் பூட்டான் அணிகளுக்கு இடையிலான போட்டியில் ஜப்பான் அணி 11க்கு 0 என்ற கோல்கள் அடிப்படையில் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையில், இரு அணிகளின் புள்ளிகளும் சமநிலை பெற, பெற்றுக்கொண்ட கோல்கள் அடிப்படையில் புள்ளிப்பட்டியலில் இலங்கை அணி முன்னிலை பெற்றது. எனவே 3 போட்டிகளில் பங்குபற்றி பூட்டான் அணியுடனான போட்டியை மற்றும் வெற்றிகொண்ட இலங்கை அணி, 4 புள்ளிகளைப் பெற்று 2ஆவது இடத்தைப் பெற்றுக்கொள்ள, தாம் பங்குபற்றிய 3 போட்டிகளிலும் அபார வெற்றியைப் பதிவு செய்த ஜப்பான் அணி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இதன்படி, எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜப்பானில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளை இலக்காகக் கொண்டு அந்நாட்டு அரசு மற்றும் ஜப்பான் கால்பந்து சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான 4 நாடுகள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடர் நேற்றுமுன்தினம் நிறைவுக்கு வந்தது.



வவுனியா புளிதறித்த புளியங்குளம் அரபா மகா வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் பாடசாலை விளையாட்டு மைதானத்தில் அதிபர் எஸ்.புகாரி தலைமையில் இடம்பெற்றது.இதில் பிரதம அதிதியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் கலந்துகொண்டார். இந்த நிகழ்வில் அதிதிகளாக மாகாண சபை உறுப்பினர்களான ரிப்கான் பதியுதீன், ஜயதிலக உட்பட மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ரவீந்திரன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.நடராஜன், மற்றும் இணைப்பாளர்களான முத்துமுஹம்மது, பாரி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.



# 2022 பொதுநலவாய போட்டிகள் இந்தியாவில் நடத்த பேச்சுவார்த்தை

பீ.எப்.எம் றிஷாட்

2022ஆம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் போட்டிகளை நடத்துவதிலிருந்து தாம் விலகிக் கொள்வதாக தென்னாபிரிக்க கடந்த செவ்வாய்க்கிழமை அறிவித்தது.பொருளாதார நெருக்கடி, டர்பன் நகரில் உரிய வசதிகள் இல்லாமை மற்றும் போதியளவு அனுசரணையாளர்கள் கிடைக்காதது போன்ற காரணத்தால் அப்போட்டிகளை நடத்துவதிலிருந்து விலகிக் கொள்வதாக தென்னாபிரிக்காவின் விளையாட்டுத் துறை அமைச்சு அறிவித்திருந்தது.

இந்நிலையில், குறித்த போட்டிகளை இந்தியாவில் நடத்துவதற்கு அந்நாட்டு ஒலிம்பிக் சங்கம் ஆர்வம் கொண்டிருப்பதாகவும், இதுதொடர்பிலான ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகளை பொதுநலவாய நாடுகள் விளைாட்டு போட்டிகளின் அமைப்புடன் மேற்கொண்டுள்ளதாக இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் ரஜீவ் மெஹ்தா இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியொன்றில் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் செயலாளர் மேலும் கருத்து வெளியிடுகையில்,கடந்த 2010ஆம் ஆண்டு இந்தியாவில் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது.அதன்பிறகு கடந்த வருடம் குவஹாட்டியில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் எந்தவொரு இடையூறுமின்றி இந்திய அரசின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது.அதேபோன்று எதிர்வரும் 2019 ஆம் ஆண்டு ஆசிய போட்டிகளும் இந்தியாவில் நடைபெறவுள்ள நிலையில், 2022 பொதுநலவாய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளை நடத்த இந்திய ஒலிம்பிக் சங்கம் முன்வந்துள்ளது.இந்திய அரசாங்கம் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினால் போட்டிகளை நடத்துவதற்கு தயாராகவுள்ளோம் என்று அவர் தெரிவித்தார். எனவே, குறித்த போட்டிகளை நடத்துவதற்கு பிரித்தானியாவின் லிவர்பூல் மற்றும் பேர்மிங்ஹம் ஆகிய நகரங்கள் விண்ணப்பிக்கவுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.அந்தவகையில், இந்தியாவும் இப்போட்டிகளை தமது நாட்டில் நடத்துவதற்கு விண்ணப்பிக்கவுள்ளதாக நேற்று செய்தி வெளியாகின.

இந்நிலையில்,இது தொடர்பில் பொதுநலவாய அமைப்பு எந்தவொரு அறிவிப்பையும் வெளியிடவில்லை.

**மேற்கிந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்:**

# பாகிஸ்தான் அணியில் மீண்டும் சல்மான் பட்?



மேற்கிந்திய தீவுகளுடன் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடருக்கான பாகிஸ்தான் அணியில் நட்சத்திர வீரர் சல்மான் பட்டை தெரிவு செய்யலாமா? என்று பாகிஸ்தான் தெரிவுக்குழு பரிசீலித்து வருவதாக கிரிக்கெட் வட்டாரங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. பாகிஸ்தான் அணி கடந்த 2010ஆம் ஆண்டு இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து விளையாடியது. அப்போது லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின்போது, பாகிஸ்தான் அணியின் தலைவர் சல்மான் பட் மற்றும் வேகப்பந்து வீச்சாளர்களான மொஹமட் ஆமீர், மொஹமட் ஆசிப் ஆகியோர் கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் மூவருக்கும் ஐந்தாண்டு தடை விதிக்கப்பட்டது. இந்நிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்துடன் அவர்களுடைய தடைக்காலம் முடிவுக்கு வந்தது. வேகப்பந்துவீச்சாளர் மொஹமட் ஆமீர் ஏற்கனவே பாகிஸ்தான் சர்வதேச அணிக்கு திரும்பிவிட்டார். ஆனால், மற்ற இருவரையும் சர்வதேச அணிக்கு திரும்ப அழைப்பது குறித்து பாகிஸ்தான் கிரிக்கெட் சபை எந்த முடிவும் எடுக்கவில்லை.எப்படியாவது பாகிஸ்தான் தேசிய அணியில் இடம்பிடித்துவிட வேண்டும் என்று எண்ணிய சல்மான் பட், கடந்த ஜனவரி மாதம் முதல் உள்ளூர் போட்டிகளில் கவனம் செலுத்தியதோடு, அதிக அளவில் ஓட்டங்களையும் குவித்து வந்தார். ஆனாலும் சல்மான் பட்டுக்கு சர்வதேச போட்டிகளில் விளையாடுவதற்கான அனுமதியை வழங்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தயக்கம் காட்டியது. இந்நிலையில், அவரது சிறப்பான ஆட்டத்தைப் பார்த்து மேற்கிந்திய தீவுகளுடனான டெஸ்ட் தொடரில் அவரை இணைத்துக் கொள்ளலாமா? என்ற பரிசீலனையில் பாகிஸ்தான் தெரிவுக்குழு ஈடுபட்டு உள்ளதாக கூறப்படுகிறது. இதுகுறித்து நம்பத்தகுந்த வாட்டரங்கள் வெளியிட்ட தகவலில், தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது. இதனால் தலைமை தெரிவுக்குழு தலைவரான இன்சமாம் உல் ஹக் மேற்கிந்திய தொடருக்கான அணியை தெரிவு செய்வது குறித்து பயிற்சியாளரான மிக்கி ஆர்தர் உடன் விவாதித்துள்ளார். அப்போது சல்மான் பட் குறித்து பேசப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இதனால் மேற்கிந்திய தொடரில் சல்மான் பட் தெரிவு செய்யப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.எனினும், மேற்கிந்திய தீவுகளுடனான சுற்றுப் பயணத்துக்கு முன் பாகிஸ்தான் வீரர்களுக்கான விசேட பயிற்சி முகாமொன்று லாகூர் கடாபி மைதானத்தில் தற்போது நடைபெற்றுவருகின்றது.இதில் 31 வீரர்கள் இடம்பெற்றிருந்த போதும், சல்மான் பட் இடம்பெற்றிருக்கவில்லை. ஆனால் பாகிஸ்தான் டெஸ்ட் அணித் தெரிவு இம்மாத இறுதியில் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெஸ்ட் கிரிக்கெட்டின் 140ஆவது பிறந்ததினம்



1877ஆம் ஆண்டு மார்ச் 15ஆம் திகதி முதலாவது உத்தியோகபூர்வ டெஸ்ட் போட்டி அப்போதைய காலத்தில் அறிமுகமான அவுஸ்திரேலியா மற்றும் அனுபவமிக்க வீரர்களைக் கொண்ட இங்கிலாந்து அணிகளுக்கு இடையே மெல்பேர்னில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 45 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்நிலையில் முதல் டெஸ்ட் போட்டி தொடங்கி 140ஆவது ஆண்டு பூர்த்தியாவதை நினைவுபடுத்தும் விதத்தில் கூகுள் நிறுவனம் டூடுல் வெளியிட்டுள்ளது. பந்து வீசுவது போலவும், துடுப்பாட்ட வீரர்கள் அதனை அடிப்பது போலவும், களத்தடுப்பு வீரர்கள் அதனை தடுக்க முயல்வது போலவும் வடிவமைக்கப்பட்டுள்ள இந்த டூடுல் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்துள்ளது.

# ஐ.சி.சி. தலைவர் இராஜினாமா!

சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) தலைவர் பதவியில் இருந்து இந்தியாவின் சஷாங் மனோகர் திடீர் இராஜினாமா செய்துள்ளார். இந்தியாவைச் சேர்ந்த சஷாங் மனோகர் கடந்த நவம்பர் 2015 முதல் சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி.) தலைவராக பொறுப்பேற்று செயற்பட்டு வந்தார். அவர் அதற்கு முன்பாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் (பிசிசிஐ) செயலாளராக பதவி வகித்து வந்தார். ஐ.சி.சி. தலைவர் பதவி ஏற்கும் முன்பாக தான் வகித்து வந்த பிசிசிஐ செயலாளர் பதவியை அவர் இராஜினாமா செய்து விட்டார்.இவர் தலைவராக இருந்த கால கட்டத்தில்தான் ஐ.சி.சி. வருவாயில் இருந்து இந்தியாவுக்கு கிடைக்கும் வருடாந்த வருமானத்தில் குறைப்பு உள்ளிட்ட சர்ச்சைக்குரிய முடிவுகள் எடுக்கப்பட்டன.இந்நிலையில் சஷாங் மனோகர் நேற்று தன்னுடைய பதவியை இராஜினாமா செய்திருப்பதாக அறிவிப்பு வெளியானது.சொந்த காரணங்களுக்காக அவர் இராஜினாமா செய்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.





இலங்கை இராணுவத்தினால் 52ஆவது தடவையாக ஒழுங்கு செய்யப்பட்ட வருடாந்த இராணுவ மரதன் ஓட்டப் போட்டி கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. 21 கிலோமீற்றர் கொண்ட இம் மரதன் ஓட்டப்போட்டி ஹதபான்கொடயில் ஆரம்பமாகி பனாகொட இராணுவ முகாமிற்கு அருகாமையில் நிறைவடைந்தது.இதில் 24 இராணுவ படைப்பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 200 வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 16TH MARCH 2017